திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்

மலர் : 8 8-4-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மணி : 35

தமிழர் அனைவரிடமும் தவ
ழப் போகும் அழகு இதழ்!

மலாயாவில்பெரியார்

தன்மான இயக்கத் தந்தை பெரியார் ராமசாமிக்கு மலாயாத் தமிழ்மக்கள் திரண்டெழுந்து தந்த வரவேற்பு விவரங்கள்; நிகழ்ச்சிப் புகைப் படங்கள்; பெரியாரின் கருத்துரைகள் மற்றும் பிரத்யேக அம்சங்கள் நிறைந்த மலர் மலாயாத் தமிழரின் இதயத்தை எடுத்துக் காட்டும் அளவுகோல் இம்மலர்!

தனிப்பிரதி விலை எட்டு அணா

ஒன்றிரண்டு பிரதிகள் வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு 8 அணா வீதம் போஸ்டல் ஆர்டர் அனுப்பவும் வியாபாரிகளுக்கு 20 சதவிகிதம் கழிவு உண்டு

கே. பீர்சையன்
199, அப்பர் சிராங்கூன் ரோடு
சிங்கப்பூர்—13

அடுத்த பொதுச் செயலாளர் யார்?

திராவிட இயக்கத்தின் பெயரை உச்சரிப்பதே தங்களின் "மேலான" கவுரவத்திற்கு பழுது ஏற்பட்டுவிடும்! பத்திரிகைகளிலே அந்த இயக்கத்தின் பெயரைக் குறிப்பிட்டு எழுதினால் "தீட்டு" பட்டு பத்திரிகையே எரிந்துவிடும் என்ற அளவுக்கு மண்டைக்கிறுக்கு பிடித்திருந்த திருமேனிகளும் அவர்களின் இதழ்களும் இன்று திராவிட இயக்கத்தின்—குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் நடவடிக்கைகளைப் பற்றி உண்மைக்கு மாருக கயிறு திரிப்பதும் கவைக்குதவாத சம்பவங்களுக்கெல்லாம் கண், காது, மூக்கு வைத்து உருவகப்படுத்துவதும், இன்னும் சொல்லப்போனால் பேனைப் பெருமான் ஆக்கும் கதையைப்போன்ற கைவரிசையிலும் இறங்கி யிருக்கின்றன. இதிலிருந்து தி. மு. கழகத்தைப்பற்றி ஏதாவது ஒன்றை எழுதினால்தான் அப்பத்திரிகைகளின் வாழ்வில் பள்ளம் விழாதிருக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறதல்லவா?

•

தி. மு. கழகத்தின் பொதுத் தேர்தல் 27—3—55-ம் நாளிலிருந்து துவக்கப்பட்டு, சிற்றூர் கிளைகளின் தேர்தலும் இனிது முடிந்து விட்டன. அடுத்து மாவட்டக் கிளைகளின் தேர்தலுக்குப் பிறகு பொதுச்செயலாளர் பதவிக்கும் தேர்தல் நடைபெற யிருக்கிறது.

பொதுச்செயலாளர் பதவிக்கு போட்டி யிடுவதென்பது கழக சட்ட திட்டப்படி தி. மு. கழகத்தைச் சார்ந்த அனைவருக்கும் உரிமையுடையதாகும். இம்முறை யார் யார் போட்டி யிடுவார்களென்பதில் பொதுவாக தி. மு. கழகத்தினர் அல்லாத மாற்றுக் கட்சியினருக்கும் அக்கரையிருக்குமென்றால் நாம் அதைத் தவறு என்றும் கூறுவதற்கில்லை, ஆனால் சிறிதும் உண்மையில்லாத, ஆதாரமற்ற வதந்திகளை எழுப்பி பொதுச்செயலாளர் தேர்வுக்கு தி.மு. கழகத்தின் 'ஐம்பெருந் தலைவர்களுக்குள்ளாகவே போட்டி' என்று ஆரம்பித்து, இந்த ஐந்து பேரும் மட்டுமல்லாமல் தி. மு. கழகத்தினர் எவருமே மனதில் நினைக்க முடியாத அண்டப்புளுகுகளை யெல்லாம் அவிழ்த்து விட்டிருக்கின்றன, இந்தப் பித்தலாட்டத்திற்கு, மதுரை நகர தி. மு. கழகத்திலிருந்து விலக்கப்பட்ட சிலரின்போக்கினை முட்டுக்கொடுக்கவும் முனைந்திருக்கிறது அப்பத்திரிகை!

கழகத்திலிருந்து விலக்கப்பட்டவர்களைப்பற்றி நாம் ஏற்கனவே விளக்கி யிருந்ததைவிட ஒன்றும் சொல்லப் போவதில்லை, ஆனால் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் பதவியின் தேர்தலைக்குறித்து அப்பத்திரிகை வெளியிட்டுள்ள செய்திகளைப் படிக்கும்போது, விற்பனைக்காக பத்திரிகைகளின் தரத்தை எந்த அளவுக்கு வேண்டுமானாலும் குறைத்துக் கொள்ளத் தயார் என்று முன்னேடி வரும் அவர்களின் நிலையைக்கண்டு உண்மையிலேயே வருந்துகிறோம்

திராவிட முன்னேற்றக் கழகம் வளரும் சக்தியாக யிருக்கிறது. அக்கழகத்தினையும், அதன் கொள்கையையும் எவராலும் அசைக்கவோ அல்லது குறை கூறவும் வழியில்லை என்பதை உணர்ந்த மாற்றுக் கட்சியினர், இப்போது எதிர்பார்ப்பதெல்லாம், தி. க.வுக்கும், தி. மு. க,வுக்கும் மோதுதல் ஏற்படாதா? தி. மு. கழகத்தினருக்கிடையே பிளவு ஏற்பட்டு சந்தியில் நிற்க மாட்டார்களா; இந்த பலயீனத்தைப் பயன்படுத்தி—பெரிதாக்கி, தி. மு. கழக வளர்ச்சியையே தடுத்து விடலாமே என்ற பரிதாப நிலைக்கு மாற்றுக் கட்சியினரின் சில பத்திரிகைகள் வந்துள்ளன,

தங்களின் சொந்த பலத்தில் நம்பிக்கை யில்லாமல் எதிரிகளிடையே மித்ர பேதத்தை உண்டாக்கி வெற்றி பெறலாம் என்று எண்ணுபவர்கள் யாரா யிருப்பினும் அவர்களைப் போல சொரணை கெட்டவர்கள் வேறுயாரு மிருக்க முடியாது.

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் பதவிக்கு ஐவரிடையே பலத்த போட்டி என்ற செய்தியில் எந்த அளவுக்கு உண்மையும் நாணயமும் இருக்கிறதென்பது ஒருபுறமிருப்பினும் அந்தப் பத்திரிகை ஆசைப்படுவதைப் போல ஐவரோ அல்லது மற்றவர்களோ போட்டியிடுவதானாலும் அதனால் தி. மு. கழகத்தினருக்குள்ளே பிளவு ஏற்பட்டு கழகமே சீர்குலைந்துவிடுமென்று கருதுமானால் அதைவிட அடிமுட்டாள்தனம் வேறொன்றும் இருக்கமுடியாது.

எனவே அடுத்த பொதுச் செயலாளர் யார் என்ற தலைப்பில் தி. மு. கழகத்தினரிடையே சலசலப்பை உண்டாக்கலாமென்று "பேரிகை" வாயிலாக மனக்கோட்டை கட்டும் பிரகஸ்பதிகளே, உங்களின் மனக்கோட்டைதான் தூள்தூளாகுமே யன்றி தி. மு. கழகத்தினரின் கட்டுக்கோப்பான தன்மையை சிறிதும் அசைக்க முடியாது. ஆகவே இனியாகிலும் அரசியல் துறையில் குறிப்பாக தி. மு. கழகத்தைப் பொறுத்த வரையில் நேர்மையுடன் நடக்க வேண்டுகிறோம்.

—நக்கீரன்

'காணமற்போன' மாலங்காவ்!

★

காணவில்லையே! இவரும் ... யாவின் சதிக்காளாக்கப் ... டாரா? என்று பேசப்பட்டு வ... மாலங்காவ், கடந்த போ... போது விடுதலைச் சேனையா... ஹங்கேரி மீட்கப்பட்ட 10-... நினைவு நாள் விழாவினை ஒட்... நடைபெற்ற கொண்டாட்டத்... இதர சோவியத் தலைவர்களுட... கலந்து கொண்டிருக்கிறார் எ... மாஸ்கோ செய்தியொன்று (4-4-... கூறுகிறதாம்!

'செஞ்சீனவில் ஒரு பெரியா...

செஞ்சின அரசாங்கத்... முன்னாள் துணைத்தலைவரான ... காங் என்பவர் கம்யூனிஸ்ட் ... சியின் மத்தியக் கமிட்டியின் ... முகமான கண்டனத்தி... ஆளாக்கப்பட்டிருந்தார். அ... ஒரு காலத்தில் மாசேதுங்க... வாரிசாக இருப்பார் என்... லாம் கூறப்பட்டதாம்.

அவர் கட்சிக்குத் துரோ... செய்துவிட்டதாக எண்ணி ... கொலை செய்துகொண்டதாக ... சீன செய்தி அறிவிக்கிறதாம்!

அமைச்சர் சுப்ரமண்யனாரே கேளீர்!

சென்னை நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்களே, தாங்கள் 3—4—55-ம் நாளன்று மதுரையிலே, ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு உபதேசமும் செய்ய முற்பட்டிருப்பதை தின இதழ்களின் வாயிலாக அறிந்தேன். தாங்கள் தி. மு. கழகத்திற்கு ஆலோசனை சொல்வதற்கு லாயக்கற்றவர் என்று யான் கூற மாட்டேன். ஆனால் அன்றைய கூட்டத்தில் தாங்கள் பேசிய பேச்சு அரசியல் அப்பாவிகளின் மாடலில் இருப்பதைக் கண்டு வருந்துகிறேன்.

"ஆந்திராவில் கம்யூனிஸ்டுகள் கட்டிய மனக்கோட்டை சரிந்து விட்டதால் சென்னை சட்ட சபையில் உள்ள கம்யூனிஸ்டுகள் சர்க்காரோடு ஒத்துழைக்கும் அளவுக்கு வந்து விட்டார்கள்...உலகமே ஒன்று சேர வேண்டும் என்று கூறுகிற நேரத்தில் திராவிட... பிரிய வேண்டும் என்று ... பது தவறுகும்......தமிழ... பாடுபடுவதாக திராவிட இ... கத்தார் கூறுகிறார்கள். ஆ... இதுவரையில் அவர்கள் ... முக்குச்செய்தது ஒன்றுமில்... என்பதாகக் குறிப்பிட்டிருக்... றீர்கள்.

அமைச்சரே, திராவிட ... கேட்பது தவறு என்று கூ... துணிந்த தாங்கள் அதற்கா... காரணங்களை விளக்காமல் கு... டுப்பாடம் போல திராவிட... கேட்பது தப்பு என உபதே... செய்வதைக் கண்டு சிரிப்புத்த... வருகிறது. உங்கள் குருநா... இருக்கிறாரே ஆச்சாரியார் அ... கள்! அவரே திராவிட நாட்... பிரிவினைக் கொள்கையை ப... தார ஒப்புக் கொள்கிறார். அ... மட்டுமல்ல இக்கொள்கை வெ... பெற்றால்தான் தென்னாடு நல...

11-ம் பக்கம்

பேராசிரியர் பேசுகிறார்!

வி. சுந்தரராசு, சங்கரன் பயிற்சிப் பள்ளி, திருச்சி.

4

தாய்மைப் பற்றில்லாத சமுதாயத்தை உயிர் நாடி இல்லாத உடலமைப்பு என்றேன். அனைவருமே இந்த உண்மையை ஒருமுகமாக ஒத்துக் கொள்ளுகிறார்கள். தாய்மையை யாருமே விட்டு கொடுக்க இசைவதில்லை. சமுதாய அமைப்பே கூட இந்த தாய்மை உணர்ச்சியினால்தான். இதனை நேற்று கண்ட காட்சியின் மூலம்தான் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. எம் கல்லூரி அரங்கு தீப்பற்றி விட்டது. எப்புறம் திரும்பினாலும் மக்கள் கூட்டம் விரைந்து வந்த வண்ணமாக இருந்தது. வந்த ஒவ்வொருவரும் வளரும் தீயை இயன்ற வழிகளையெல்லாம் கையாண்டு அணைத்தார்கள். எவ்வளவோ ஒய்யாரமாக வளர்ந்திருந்த கட்டிடம் அது. நகருக்கே ஒரு எழில் அரங்காக விளங்கியது. அதன் பெருமை சற்று நேரத்தில் பற்றிய தீயால் அழிந்துபடுவது கண்டு மக்கள் கூட்டம் மிகவும் கலங்கி விட்டது.

யாரோ ஒருவருடைய உரிமைக் கட்டிடம் அது. ஆடம்பரமாக அக்கட்டிடம் பொலிந்தபோது அதனைப் பார்த்து பெருமை எய்தத்தான் நகர மக்களுக்கு உரிமை இருந்தது. ஆனால் அதன் முழு உரிமையும் ஒரு தனி மனிதனுக்கு உடைத்தா யிருந்தது. ஆனால் நெருப்புக்கு இரையாகி மாளிகை அழியும்போதோ மக்கள் கூட்டமே ஒருமுகமாக துயருற்றது. பற்றி யெரியும் நெருப்பை அணைக்க ஒவ்வொருவரும் இயன்ற வழிகளிலெல்லாம் முயன்றனர். எப்படியோ ஒருவகையாக நெருப்பு அணைந்தது அணைந்த பின் வந்திருந்த மக்கள் கூட்டம் தனித்தனியே பிரிந்து சென்றுவிட்டது. இந்த காட்சியை நேற்று நான் கண்ணுற்றேன். சமுதாயமும் இப்படித்தானோ! இப்படி ஒரு சமுதாயம் அமைவுறுமேயாயின் கண்டிப்பாக அங்கே மக்கள் வாழ்க்கைக்கு ஏற்ற வகை அமையாது. சமுதாயம் அப்படிப்பட்டதல்ல; குறிப்பிட்ட சமயத்தில் ஒன்று கூடிவிட்டு துயரம் நீங்கிய பின் பிரிந்து செல்லும் மனப்பான்மையல்ல சமுதாய மனப்பான்மை. துயருக்கு உதவி செய்யும் பண்பு தாய்மைக்கான ஓர் சிறப்புப் பண்பு என்று மட்டும் சொல்லமாட்டேன். மனித உலகுக்கு அமைந்த அடிப்படைப் பண்பு அது. சமுதாயம் துயரப்படும் போது இரங்கும் உள்ளம், சமுதாயத்தில் இணைவு பெறாத மக்களுக்கும் கூட உண்டு.

இரண்டாவது உலகப் போர் நடந்தது நாடெங்கும் போர் முழக்கம் ஒலிக்கக் கேட்டோம். போரின் பொருள் தெரியாத நாடுகளும் மக்கள் கூட்டமும் துயரப்பட்டது. அதிலும் குறிப்பாக நாகசாகி, ஹிரோஷிமா—ஆகிய இருநகரங்களும் அணுவுக்கு இரையாகி அழிந்துபட்டது, பல்லாயிரக் கணக்கான மக்கள் இருநகரங்களிலும் அழிந்துபட்டதை எண்ணி உலக நாடுகளில் எல்லோருமே துயரப்பட்டனர். இதனை தாய்மைப் பண்பு என்று கூறமுடியும்! மாறாக மனிதப் பண்பு என்றுதான் இயம்பலாம். தொல்லைப்படும் மக்கள் கூட்டத்தையும், அழிந்துபடும் வனப்பு வளத்தையும் கண்டு இரங்கும் சக்தி சமுதாயத்தில் துலங்குவோருக்கு மட்டுந்தான் நிலைத்துள்ள பண்பு என்று கூற இயலாது. சமுதாயத் தொடர்பு பெறாத உயிரினங்களுக்கும் உண்டு! இது கடமை உணர்ச்சி!

சமுதாயத்திற்குள்ள கடமை உணர்ச்சி கடமையாக இயங்கும் சக்தியாக மட்டும் இருந்துவிடக் கூடாது. கடமை உணர்ச்சி மிளிரும் சமுதாயத்தில் தான் உரிமை குரலும் ஒலிக்க வேண்டும். அந்த ஒப்பற்ற உரிமைக் குரல்தான் சமுதாய இதய ஒலி. அந்த உரிமைக்குரல் எனும் இதயஒலிக்கு தாய்மைப் பற்றுத்தான் பிறப்பிடமாக இருக்க இயலும். ஒருவருடைய தாய்மைப்பற்றை உணர அவன் ஒலிக்கும் உரிமை உணர்ச்சியே போதுமான சான்று. உரிமையை உணராது கடமையே கடனாக எண்ணும் மனதில் அந்த ஒப்பற்ற தாய்மைப் பற்றுதலைக் காணவில்லை என்றே சொல்லலாம்! இயந்திரம் போன்ற வாழ்வைத்தான் தாய்மை குறைவுபட்ட அவர்களிடம் காண இயலும்! தணியாத உரிமைக்குரல், ஊக்கத்துடன் எழுச்சி பெறுவதைக் காண இயலாது. அந்த வாழ்வு வாழ்வாகாது என்று உணர வேண்டும்.

காதலர் குடும்பந்தான் இந்த உயர்ந்த உண்மையை உலகுக்கு வெகு எளிதில் நவில முடிகிறது. காதலின் இன்ப உறவுக்கும், வாழ்க்கையில் தமக்கு அமைந்து கொண்ட கடமை உணர்வுக்கும் கணவன், துணைவிக்கு என்று அமைந்த உரிமைத் தாகமும் ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் பொலிவதைக் காணுகிறேன், காளடைவில் அவர்கள் ஈன்று தவும் செல்வக் குழந்தைகளிடம் உள்ள அன்பும் பாசமும் என்றும் பிரிக்க ஒண்ணாததொன்று. குழந்தைகளிடம் இயற்கையாகவே உள்ள அன்பும் பாசமும் மட்டும்தான் ஈன்ற மகளிடம் தாய்க்கு அமைவதில்லை. இயற்கையான மக்களுலகுக்கு குழந்தைகளிடம் அமைந்துள்ள பாச உணர்வைவிட, தன் குழந்தை, தான் ஈன்ற மகவு—என்ற உரிமைப் பாசம் பொலிவதைத் தாயாகப் பிறந்தவர்கள் தன் மகவிடம் காட்டும் அன்பு நெறியால்தான் உணர இயலும். இத்தாய்மைப் பற்றைத்தான் நான் சமுதாயத்தின் உயிர்நாடி என்று இயம்புகிறேன். தான் பிறந்த சமுதாயத்தை மாறான் குழந்தையைக் கண்டு மகிழ்வதைப்போல் எண்ணி வியக்கும் மாந்தர்களைக் கண்டிக்கிறேன். இதயத் தொடர்பும், இரத்த பாசமும் கொண்ட தாய் தன் மகவைக் கண்டு, கேட்டு துய்க்கும் இன்பத்தைப்போல சமுதாயத்திற்கு உன் கடமையைச் செய்வதோடு 'நான் வளர்ந்த சமுதாயம்' என்ற இதய உணர்ச்சி வேண்டும் என்று இயம்புகிறேன்.

சமுதாயத்திடம் காட்ட வேண்டிய இந்த ஒப்பற்ற தாய்மை உணர்ச்சியை என்னைப் போன்ற பேராசிரியர்கள்தான் வளர்க்க இயல்கிறது. தொழிலாளிகள் யந்திரத்தோடுப் பழகிப் போனவர்கள், உலகமும் யந்திரம் போலவே தோன்றும் தன்மை அவர்களுக்கு உண்டு; வழக்கறிஞர்கள் ஒரு சாராரை விரோதியாக எண்ணி, அவர்கள் வீழ்ச்சிக்கு வாதிட்டுப் பழகியவர்கள். அவர்கள் உலகில் எதிரிகள் இன்றேல் அவர்தம் தொழிலுக்கே பேராபத்து நேரிட்டு விடும். வணிகர்களோ பொருட் செல்வத்தோடே பழகிப் பண்பட்டவர்கள். குறுக்கு வழியில் மூலதனம் பெருக்கும் வழியை உணர்த்தும் உலகம் அது.

அரசாங்க அலுவலகத்தில் வேலை செய்வோர் கூட கடமையை உணர்ந்த அளவுக்கு தாயக உணர்வைப் பெறுவதில்லை. ஆனால் என் தொழிலோ இத்தனை தொழிலுக்கும் முற்றிலும் வேறுபட்ட தொழில். நாங்கள் பழகும் பண்டங்கள் இயந்திரங்களல்ல எதிர்கால உலகுக்கு இயங்க வேண்டிய மாணவச் செல்வங்கள். அறிவுத் தாகம் ஏற்படும் போதெல்லாம் நூல் நயங்களை விளக்கி ஒரு வகையான பசியைப் போக்கும் தொழில் நடத்தக்கூடியவர்கள்தான் நாங்கள். இளமை உள்ளங்களை நாள்தோறும் சந்தித்துக் கருத்துக்களை பரிமாறிக் கொள்கிறேன். யந்திரம் போன்ற வாழ்வல்ல. அனுதினமும் புதிய எண்ணங்கள் வளரவும் புதிய கருத்துக்கள் வளரவும் ஏற்ற தொழில் உலகிலேயே என் தொழில்தான். பேராசிரியருக்கு தொல்லை தரும் போது மாணவர்கள் மீது பிணங்குகிறோம். ஆனால் முழுதும் வெறுப்படைந்து விடுவதில்லை; மகிழ்ச்சியான நேரங்களில் மாணவர்களே எங்களுடன் ஒத்துழைப்பதும் உண்டு. எங்கள் கேண்மையில் இன்ப துன்பம் இரண்டும் கலந்து வரும். கடமையை எண்ணும்போது சலிப்பும் உரிமையை எண்ணும் போது மகிழ்வும் பிறக்கக் கூடிய தொழில் என் தொழில் ஒன்றுதான். ஊதியத்திற்காக உழைக்கிறோம் என்ற கடமை உணர்ச்சி தோன்றிவிட்டால் எங்கள் வாழ்வு பாழாகிவிடும். மாணவ நட்பும் அழிந்துபடும். மாணவர்களை செல்வங்களாக எண்ணும் காலம் அழிந்து யந்தரங்களாக எண்ணும் காலம் வளர்ந்துவிடும். தொழிலிலும் சுவை மிளிர்வதில்லை.

ஆனாலோ கடமையை மறந்து நாங்கள் வேலை செய்கிறோம். உரிமையின் பொருளை முழுதும் நாங்கள் உணர்ந்துள்ளோம். மாணவர்கள் நமது செல்வங்கள் என்ற எண்ணம் மிளிர மிளிர எங்கள் சொற்பெருக்கிலும் புதுமை எண்ணங்கள் பெருகுகின்றன. இந்த தாய்மை உணர்ச்சி அமைந்துள்ளதால்தான் கலைக் கல்லூரியால் பயிலும் மாணவர்கள் வாழ்க்கையில் நெறியாக இயங்கவும் முடிகிறது.

இந்த தாயமைப்பற்று—இயற்கை நெறியில் இயங்குமொன்று—ஏன் அழிந்துபட்டது! குறிப்பாகத் தமிழகத்தில் தாய்மை உணர்ச்சி இல்லாத மாந்தர்களை எண்ணிக்கைக் குட்படாதவாறு காண இயல்கிறது! தமிழகத்தில் மட்டிலும் ஏன் இந்த பேராபத்து! தமிழனை செய்த பிழை என்ன! தமிழ்த்தாய் ஒருவளுக்கு பிறந்த மக்களுக்கு மட்டிலும் ஏன் இந்த இயற்கைப் பண்பு இல்லாது நீங்கியது என்று நீண்ட நேரம் சிந்தித்தேன். தாய்மை உணர்ச்சிகுன்றிய தமிழகத்தை நினைக்கும் போதெல்லாம் எதிர்த்த வீட்டு நண்பரின் ஒரே மகனின் ஞாபகம்தான் வருகிறது. ஐந்து வயது சிறுவனாக இருக்கும்போதே லண்டன் மாநகருக்கு அனுப்பி வைத்திருந்தார். 25 ஆண்டுகள் நிரம்பியபின் இலண்டனில் தன் படிப்பு முடிந்து தாயகம் திரும்பிய அந்த சிறுவனை அவன் தந்தையும் நானும் துறைமுகத்திற்கு வரவேற்க சென்றிருந்தோம். அங்கே கண்ட காட்சிகளை இன்றும் நினைத்தால் மனம் மிகவும் புண்படுகிறது! சிறுவனாகச் சென்றவன் வாலிபனாகத் திரும்பி வந்தான். குரலிலே மாற்றம்; உடலின் மென்மை நிறத்திலே மாற்றம்; உருவத்திலே மாற்றம்; தன் போக்கிலும் மாற்றம்; இப்படிப்பட்ட ஒரு சிறுவன் தமிழகத்தைச் சேர்ந்தவனா என்ற ஐயப்பாடு எனக்கு மிகவும் தோன்றியது. தாய்மொழியில் பேச உணராதவனாகி விட்டான்; தாய்நாட்டு உணர்வும் அற்றுவிட்டது மேனாட்டு உடை மேனாட்டு முறையில் பயிற்சி ஆகியவற்றிற்கு தமிழன் ஒருவன் இரையாகி விட்டானே என்பதை எண்ணும்போதுதான் மிகவும் துயரப்பட்டேன். மேனாட்டுக் கல்வியை உணர்வதற்காக ஒரு தமிழ் மகன் இரையாகி விட்டான் என்று உணர்ந்து தேம்பித் தேம்பி அழுதேன்.

மேனாட்டு சிறுவர்கள் இந்நாட்டிற்கு படிப்பு கருதி வருவதுண்டு. அவர்களெல்லாம் தம்தம் நாட்டுக்கு இயையத்தான் பழகுவார்கள், தாய்நாட்டு நெறியை ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்க அவர்கள் மனம் இசையமாட்டார்கள். தமிழகப் பலகலைக் கூடத்தில் பயிலும் அமெரிக்க ஐரோப்பிய மாணவர்கள் மட்டும் எவ்வளவுதான் தமிழக சூழ்நிலையில் பழகினாலும் தன் தாயக இன உணர்ச்சியை ஒரு சிறிதும் விட்டுக் கொடுப்பதில்லை. ஆனால் தமிழ் மாணவன் ஒருவன் கேம்பிரிட்ஜ ஆக்ஸ்போர்டு போன்ற பல்கலைக் கழகங்கட்கு படிப்பு கருதி சென்றாலோ தன் வாழ்க்கையை சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் தானும் அந்த சூழ்நிலையில் இயங்கும் அமெரிக்க ஐரொப்பிய இனத்தான் என்று எண்ணிக்கொண்டு அந்தந்த சூழ்நிலையோடு பெரிதும் ஒட்டிவிடுகிறான். ஏன் இந்த கீழான நிலை, வேற்றுநாட்டார் சூழ்நிலையைப்பற்றி கவலைப்படாத அளவுக்கு தமிழ் நாட்டான் மட்டும் ஏன் கலங்க வேண்டும்! வேற்று நாட்டான் இன உணர்ச்சியை ஒருசிறிதும் கொடுக்காதபோது தமிழன் மட்டும் ஏன் விட்டுக்கொடுக்க வேண்டும்! அவரவருக்குத் தான் பிறந்த இனம், தான் பேசும் மொழி, தான் வளர்த்த கலை ஆகியவற்றுள் ஆழ்ந்த நம்பிக்கையும் மேன்மைத் தன்மையும் உண்டு. ஆனால் தமிழனோ அப்படிக் கருதவில்லை. தனது இனம் வந்து புகுந்த வஞ்சகரினத்தோடு ஒப்பிட்டால் தாழ்ந்த இனம் என்று கருதிக் கொள்கிறான். தன் மொழி கீழானதொன்று என்று எண்ணிவிடுகிறான். தனதுகலை அநாகரீகமானது என்று எண்ணிவிடுகிறான்.

இப்படிப்பட்ட தாழ்வு மனப்பான்மையைத் தமிழன் வளர்த்துக் கொண்டதால்தான் வந்து புகுந்த வஞ்சகர்களெல்லாம் உயர்ந்த இனத்தோராகி விட்டனர்; தன் மொழியைப் பேணும் ஆர்வத்தை உணராத குறைதான் தமிழ் மொழியில் பயில மாணவர்களே வெட்கப்படும் இழிநிலை வளர்ந்து விட்டது.

தன் கலையைக் கீழாக எண்ணிப் பேணாத காரணத்தால்தான் இன்று தமிழருக்கும் கலைஉண்டா என்ற ஐயப்பாடு தோன்றிவிட்டது! வந்துபுகுந்த வடமொழிக்கு மேலிடம் தந்தோம்; கலைவளரும் அரங்குகளெல்லாம் அவர்கள் வசம் சிக்கிச் சிதைந்தது வந்து புகுந்த இனங்களைப் பெருமை படுத்தினோம்; தமிழ் இனத்திற்குள்ளேயே பெரும்பகையை வளர்த்து விட்டார்கள். இந்த இழிநிலை துடைக்கப் படும் நாள் என்நாளோ!

தமிழன் தன்நாட்டுப் பெருமையையும் வாழ்ந்த வளத்தையும் உணரும் காலம் வரவேண்டும்; அப்போதுதான் தமிழன் தமிழனாகத் துலங்கஇயலும். தமிழனின் பெருமையை நினைவுபடுத்தி தாழ்ந்த தமிழகத்தைத் தன்னுணர்ச்சி பெற நினைவூட்டும் மறுமலர்ச்சி இயக்கங்களை வசைப்பாடித் திரியும் கூட்டமும் தமிழ் இனத்திலேயன்றி வேறு எந்த இனத்திலும் காண இயலாது: எனவே அழிந்துபட்ட தாயக உணர்ச்சியையும், தாய்மைப் பற்றையும் வளர்க்கப்பாடுபடும் அறிஞர்கள் கூட்டத்தை தமிழகம் முழுதும் உணர வேண்டும். இது விழிப் புணர்ச்சிக் காலம்; இன எழுச்சி பெற்று ஒவ்வொரு இனமும் துலங்க வேண்டிய அவசியத்தை உலகெங்கும் பரவிவரும் இனஎழுச்சிப் பெரியார்கள் இயம்புகின்றனர். எனவே விழிப்புணர்ச்சிக் கழகங்களின் இலட்சியங்களை உணர்ந்து அவ்வழியில் வாழ்க்கையை இயக்கும் உறுதியான எண்ணம் தமிழகத்தில் மலர்ந்தால் இழந்த தாய்மைப்பற்றைத் திரும்பப் பெறுவதோடு, எதிர்கால தமிழக சமுதாயமும் சீர்திருத்த பாதையில் இயங்கும் என்பதும் உறுதி!

—தொடரும்

ஆத்திரக்காரருக்கு ... (அது) மட்டு?

சென்னை சட்ட சபை எதிர் கட்சியின் துணைத் தலைவரான தோழர். கல்யாணசுந்தரம் அவர்கள், சட்டசபைக் கூட்டத்தின் போது, கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய போக்கினையும், தாங்கள் திருந்திவிட்ட விவரத்தையும்கூறி அந்த விவரங்களையே பேரமாக வைத்து சிறையிலுள்ள தமது கட்சியின் தோழரை விடுதலை செய்யுமாறு சர்க்காருக்குத் தெரிவித்ததையும், இதற்கு நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் கூறிய பதிலையும் நண்பர்கள் ஏற்கனவே அறிந்திருப்பார்களென நம்புகிறேன்.

இதனைச் சித்தரித்து 25-3-55ம் நாள் 'திராவிடன்' இதழில் யான் கம்யூனிஸ்டு தலைவர் கல்யாணசுந்தரம் பேரம் பேசுகிறார். என்னும் தலைப்பில் எழுதியிருந்ததை திராவிடன் வாசகர்கள் அறிந்ததே. அக்கட்டுரையைக் கண்ட கம்யூனிஸ்ட் கட்சி இதழ் "ஜனசக்திக்கு" ஆத்திரம் மேலிட்டு ஐ. மா. பா. என்ற பெயரால் 3—4—55-ல் ஓலமிடத் துவங்கி "ஜாக்கிரதை" என்று தனது வசை புராணத்தை முடித்திருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்கள் தோழர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியை நாம் தவறென்று கூறவுமில்லை. அது கடமையுங்கூட. ஆனால் எங்கள் போக்கிலே யிருந்து திருந்திவிட்டோம்; எனவே விடுதலை செய்யுங்கள் என்று கேட்கும் திருவிளையாடலைத்தான் நான் விவரித்திருந்தேன் இவ்வாறு நாங்கள் கேட்டதில்லை யென்று கம்யூனிஸ்ட் தலைவர் கல்யாணசுந்தரம் கூறமுடியாது; ஏனெனில் நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்களே இதற்கு தக்க பதில் கூறியிருக்கிறார். அதுவும் சட்ட சபையில் பேசிய பேச்சுக்கள்; 'ஜனசக்தி' இதனை எவ்வாறு மறுக்க முடியும்? ஆகவேதான் என் மீது சீறிவிழுகிறது! உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல் கொள்வது அறிவுடைமைதானா என்பதை அந்தப் பொதுவுடமையாளர் ஐ. மா. பா. அறியவில்லை!

தனது தவறைஒப்புக்கொள்ளும் நேர்மைப் பண்பில்லாதவர்கள் அவற்றை மறைக்க மேலும் பல பொய்யைச் சிருஷ்டிக்கும் அபார வேலையில் 'ஜனசக்தி' ஐ. மா. பா. வும் முயன்றிருக்கிறார்!

"கம்யூனிஸ்ட் தலைவர்களை இப்படி எழுதும் நக்கீரனைக் கேட்கிறோம் குணாளா மணாளா எங்கள் குலக்கொழுந்தே மனமிரங்காயோ! விடுதலை செய்யாயோ! என்று காமராசரிடம் மண்டியிட்டது. கம்யூனிஸ்டுகளா அல்லது தி. மு. கழகத் தலைவர்களும் அவர்களின் பத்திரிகைகளுமா ?......ஜாக்கிரதை" என்று ஆத்திரத்தில் மூழ்கி அர்ச்சனை செய்திருக்கிறது 'ஜனசக்தி'!

எனவே 'ஜனசக்தி'யின் ஐ. மா பா. வுக்கு அறிவுறுத்த வேண்டியது நம் கடமையாகிறது.

சென்னை முதலமைச்சர் காமராசர் அவர்களைக் குணாளா என்று தி. மு. கழகத்தினர் புகழ்ந் திருப்பார்களானால், வர்ணாஸ்ரம கல்வி திட்டத்தை ஒழித்ததற்காக யிருக்குமே யல்லாது வேறில்லை.

அப்படி புகழப்பட்ட நேரங்களிலும் எங்கள் தோழர்களை விடுதலை செய்யுங்கள் என்று எவரும் கெஞ்சியது கிடையாது. பொதுவாக வழக்கை வாபஸ் பெறுக என்று ஆசியலாரை எச்சரிக்கப்பட்டதே யல்லாது பேரம் பேசியது கிடையாது.

காமராசர் அவர்களே, முதலமைச்சரே, நாங்கள் இனிமேல் திராவிட நாட்டுப் பிரிவினையை வற்புறுத்துவதில்லை; அல்லது கழகக் கொள்கையினை மாற்றிக் கொள்கிறோம்; எங்கள் போக்கினைத் திருத்திக் கொண்டோம் என்று பேரம் பேசியதாக கம்யூனிஸ்ட் தலைவர்கள் கூறமுடியுமா? எங்கள் பத்திரிகைகளில் அவ்வித பொருள் படும்படியாக வாவது எழுதியிருப்போமா?

இவைகளை உணராமல் ஆத்திரப்படுகிறது 'ஜனசக்தி'! ஜாக்கிரதை என்றும் மிரட்டுகிறது நம்மை! இந்த வெத்து வேட்டுக்களுக்கே மூளைக் குழம்பிப்போய் மாஸ்கோ மருத்துவத்தை எதிர் பார்க்கிறதென்றால் இந்த லட்சணத்தில் மிரட்டல் வேறு!

எனவே 'ஜனசக்தி'யின் ஐ. மா. பா.வே, ஆத்திரப் படேல்! குற்றத்தை உணர்க; உணர்ந்து திருந்துக; வீணான கூப்பாடு போட்டு மிரட்ட முனைவது மனிதத் தன்மைக்கே முரணானது என்பதை உணர்க.

கேள்வி? பதில்.

அஞ்சாநெஞ்சன்

கே: வெற்றி வீரர்களைப் பெற்றெடுத்து வீரப் பண்பாடியவர்கள் நாங்கள் என்ற பழந்தமிழ்நாடு இன்று பாழ்பட்ட நாடானது ஏன்?

—மு. சி. வீரையா, சார்வியாகுருப்பி

ப: இச்சிறப்புக்குரிய தமிழகத்திலே—ஏன் தமிழர்களிலே ஆரியத்துக்கு துணைபுரிய சில விபீடணர்கள் தோன்றியதால்தான்.

*

கே: சென்னை பிரதம மந்திரி காமராஜ நாடார் திராவிடநாடு தனியாக யிருப்பதற்கு ஒப்புக்கொள்வாரா?

—டி. ராஜாராம், கடலூர்

ப: சென்னை முதலமைச்சர் காமராசரைக் கேட்க வேண்டிய இந்த முக்கிய கேள்வியை என்னைக் கேட்டு பதில் எதிர்பார்ப்பது சரியல்ல தோழரே.

*

கே: அஞ்சா நெஞ்சனே, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், காமராச நாடார், ராஜாஜி இந்த மூன்று பேர்களில் நல்லவர் யார்— விருப்பு வெறுப்பு இல்லாமல் பதில் கூறவேண்டும் தெரிகிறதா?

—என். சாம்பசிவம், வடசென்னை

ப: என்ன தோழரே, கேள்வியிலேயே அதட்டல் போ... றீரே—சரி நீங்கள் கேட்ட... போலவே சொல்கிறேன் கே... கள்—இம்மூவரும் தனிப்ப... முறையில் மிகவும் நல்லவ... தான் என்பதை மனமாரத் ... விக்கிறேன்.

*

கே: பம்பாயில் தமிழர்கள் அதிக... மற்ற மொழி பேசுபவர்கள் அதிகமா?

—வி. நெடுமாறன், தேவ...

ப: பம்பாயில் தமிழ் பேசு... கள் குறைவாகத்தானே இ... முடியும்.

*

கே: அஞ்சா நெஞ்சனே, உங்... கட்சிக்காரர்கள் ஐந்தாண்டு திட்... கண்டனம் என்று கூட்டம் நடத்தி... களே, இதனால் சோறு கிடைத்து... டதா?

—மு. கணபதி, தி...

ப: தோழரே, தங்களின் ... வியைப் பார்த்தால் சோற்... டித்த பிண்டங்களின் கோ... யை சார்ந்தவர் போலத் ... கிறது. எந்த வழியிலா... சோறு மட்டும் கிடைத்... போதுமென்று எண்ணும் ... களுக்கு, ஐந்தாண்டுத் திட்... கண்டனங்களைப் போன்ற ... யல் எழுச்சிகளுக்குப்பின் நாட்டு மக்கள் அனைவரும் ... மானமுடன் கிடைக்கப் போ... சோறும் மனித உரிமையும் ... படிப் புரியும்? எதற்கெடு... லும் சோறு கிடைக்குமா என... கூச்சல்போடும் கோஷ்டியின... அறிவுதான் 'அண்டர் ரிபே... ருக்கிறதே!

*

கே: அஞ்சா நெஞ்சனே, உங்... தி. மு. கழகத்திலும் அபிப்ராய பே... இருக்கிறது. என்று என் சிநேகி... சொல்லுகிறார். இது நிஜமா?

—எ. சரவணன், த...

ப: தோழரே, சில பேர்க... கொண்ட குடும்பங்களிலே ... ஒருவருக்கொருவர் அபி... பேதம் இருந்து வருகிறதெ... பல பேர்களைக் கொண்ட ... களில் அபிப்பிராயபேதமிரு... ஆச்சர்யமில்லையே—அப்படி... றுமில்லை யென்று சொல்... கடைந்தெடுத்த பித்தலாட்... கும். ஆனால் தி. மு. கழகத்... தங்களின் அபிப்ராய ... தால் சிதறுண்டு, கழகமே ... குலைந்துவிடும் என்று ... கோட்டை கட்டுகிறார்களே ... களைப்போன்ற அடிமுட்டாள் வேறு யாருமிருக்க முடி... என்று மட்டும் உமது கேள்... பதில் கூற விரும்புகிறேன்.

எப்பொருள் யார்யார் வாய்க் [கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் [காண்பதறிவு
—அமைதி கொள்வீராக!

—நக்கீரன்

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

அழகிரி நாடக மன்றத்தார்

(பீர்சாகிப்பேட்டை சென்னை-14)

அளிக்கும் முதல் சமூக நாடகம்

'அத்தான்'

கதை, வசனம்: எஸ். எஸ். தென்னரசு

பாடல்கள்: கவிஞர். கண்ணதாசன், பூவை. செங்குட்டுவன்

இசையமைப்பு: இரா. சாரங்கராஜன்

பயிற்சி: ஏ. தன்ராஜ்

நடிகர்கள்: திருநாவு, டி. ஏ. வெங்கிடாசலம், மு. புரட்சிமணி, சாரங்கன், வி. கன்னியப்பன், பெருமாள், உமார், ஈ. மணி, சி. ஆர். ஞானசேகரன், இராமச்சந்திரன், லோகநாதன், நித்யானந்தம்.

நடிகைகள்: என். ஆர். சகுந்தலா, வி. சரசுவதி, மனோகரி, கே. ஆர். ஆண்டாள்.

வி. கன்னியப்பன், அமைப்பாளர்.

"திராவிடன்" சந்தா விவர...

ஆண்டு சந்தா	...	ரூ. 8 ...
ஆறுமாதம்	...	ரூ. 4 ...
தனிப்பிரதி	...	ரூ. 0 ...

வெளிநாடு

ஆண்டு சந்தா	...	ரூ. 9 ...
ஆறு மாதம்	..	ரூ. 4 8
தனிப்பிரதி	...	ரூ. 0 ...

தோழர்களே, "திராவிட... சந்தாதாரராகச் சேர்ந்து... ரிக்க வேண்டுகிறோம்.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம், மார்ச் முடிய நிலுவைத் தொகையை உடனே அனுப்பி வைக்குமாறு நினைவூட்டுகிறோம். முன் பணத்தை விட நிலுவை அதிகரித்துவிட்டவர்களுக்கு பத்திரிகை நிறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி—'திராவிடன்'

திராவிடன்

சென்னை : 8—4—55 : வெள்ளி

ஏன் இந்த ஓர வஞ்சனை?

"தென்னாப்பிரிக்காவில் உள்ள வெள்ளை அரசாங்கம் அவ்விடமுள்ள கோடிக் கணக்கான கறுப்பர்—இந்தியர், ஆப்பிரிக்கர் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள நிறபேதக் கொடுமை குறித்து நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? உங்கள் நோக்கம்தான் என்ன? ஏன் வாய்மூடி மவுனிகளாய் இருக்கின்றீர்? கம்யூனிஸ ஆதரிப்பு எதிர்ப்பு பூச்சாண்டியைக் கிளப்பிக் கொண்டு அங்கு நடத்தப்படும் இனவெறியாட்டத்தை சகித்துக் கொள்ள நாங்கள் தயாராயில்லை. எனவே தென் ஆப்பிரிக்க சர்க்காரே முதலில் நாகரீகம் தெரிந்து கொள்ள முற்படுங்கள்"

என இந்தியப் பேரரசின் பிரதமர் நேரு பண்டிதர் 3-4-55-ம் நாள் புதுடெல்லியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கர்ஜித்திருக்கிறார்!

தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர் கறுப்பரை நடத்திவரும் கேவலத்தன்மை, கொடுமை ஆகியவைகள் உலகறிந்தவை. அங்கு கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறவர்கள் இந்தியர்கள் என்றதும் நேரு பண்டிதருக்கு கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. உள்ளம் துடிக்கிறார் அகில உலகத்தையும் பார்த்து கண்ணீர் வடிக்கிறார்!

பத்திரிகைகளோ நேரு பண்டிதரின் இந்தக் குமுறலை படம் பிடித்துக் காட்டுவதுபோல எழுதுகின்றன!

தென்னாப்பிரிக்க வெள்ளை இன சர்க்காரால் அங்கு வாழும் ஆப்பிரிக்க இந்திய கறுப்பு மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்து நேரு பண்டிதர் இவ்வாறு பேசுவது நியாயமும் நேர்மையுங்கூட. நேரு பண்டிதரின் இந்த உணர்ச்சியை வரவேற்கவும் செய்கிறோம்.

தென்னாப்பிரிக்க வெள்ளை சர்க்காரின் கொடுமையினால் பாதிக்கப் படுகிறவர்கள். தம் இனத்தவர்கள் என்பதற்காகவே நேரு பண்டிதர் சற்று உரத்த குரலில் பேசியிருக்கிறார் என்று நாம் கூறுவதை எவரும் தவறாகக் கொள்ளமாட்டார்கள் என்றே நம்புகிறோம்.

கொடுமையும், நிறத் திமிரும், அதைத் தட்டிக் கேட்டால் அடக்குமுறையை ஏவிவிடும் அநீதிகள் எங்கு நடைபெற்றாலும் அது கண்டிக்கப்பட வேண்டியதாகும். இதனை யாரும் மறுக்கத் துணியார்.

ஆனால் நேரு பண்டிதரின் இந்த பாசமும் அல்லது உணர்ச்சியும் இலங்கைவாழ் இந்தியர் பிரச்னையில் வரண்டு போவதேன்? இலங்கைவாழ் இந்தியர்கள் அனைவரும் பெயரளவுக்கு இந்தியர்களே தவிர மிகப் பெரும்பாலோர் திராவிடர்கள் என்பதாலா? அல்லது நேரு பண்டிதருக்கு வெள்ளை ஆப்பிரிக்க சர்க்காரை கண்டிக்கும் போது ஏற்படும் துணிவு—இலங்கை சர்க்காரிடம் காட்ட முனையும்போது பஞ்சமாகி விடுகிறதா?

கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில் இந்தியாவும்—இலங்கையும், இலங்கைவாழ் 'இந்தியர்' பிரச்சினைக்குப் பரிகாரம் எனக் கூறி, ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தை சில திருத்தங்களுடன் புதுப்பித்துக் கொண்டனர்.

அந்த ஒப்பந்தம் குறித்தும், அதனைத் தொடர்ந்த விளைவுகள் குறித்தும் நாம் அவ்வப்போது எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம்

இப்போது அந்த ஒப்பந்தத்தை மீறி நடப்பதாக இலங்கை மீது இந்தியப் பேரரசும், 'ஒப்பந்தத்தை அமுல் செய்ய இந்தியா ஒத்துழைக்கவில்லை' என்று இலங்கை சர்க்காரும் குற்றஞ் சுமத்தி வருகின்றனர்.

இலங்கையில் தற்போது சட்டமாக்கப்பட்டுள்ள குடியேற்ற, வெளியேற்றச் சட்டத் திருத்த மசோதாவின் சில பிரிவுகளை இந்திய அரசாங்கம் ஆட்சேபித்திருக்கிறதாம்.

"இலங்கையில் வாழும் 'இந்தியரி'ல் எவ்வளவு அதிகமான பேர்களை வெளியேற்ற முடியுமோ அவ்வளவு அதிகமான பேரை வெளியேற்றியே தீருவது" என்று முடிவு கட்டிவிட்ட இலங்கையின் ஆளும் வர்க்கத்தினரிடம், இந்தியர் பிரச்னையைத் தீர்ப்பதில் நல்லெண்ணம் தேவையான அளவு இருக்குமென எதிர்பார்க்கக் கூடாது தான். பிரச்னைக்கு ஆளாக்கப்பட்டிருப்பவர்கள்தான் பிரச்னைக்குரிய சரியான பரிகாரங்களைத் தேடுவதில் நல்லெண்ணமும், உள்ளத் தூய்மையும் கொண்டவர்களாகயிருக்க வேண்டும்.

இலங்கை இந்தியர் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதில், இந்தியப் பேரரசிற்கு தென்னாப்பிரிக்காவில் கொடுமைக்காளாகும் இந்தியர் பிரச்சினைக்குப் பரிகாரம் காணுவதில் இருக்கும் நல்லெண்ணம் இருக்கவில்லை' என்று இலங்கை 'இந்தியர்' கூறினால் அது தவறாகாது என்றே கருதுகிறோம்.

'இலங்கை—இந்தியா ஒப்பந்தமே பிரச்சினைக்குப் பரிகாரம்' என்றார்கள்; விளைவுகள் விபரீதமாகி வருகின்றன! இதற்குக் காரணம், இலங்கை ஆள்வோரின் நல்லெண்ணக் குறைவு மட்டுமல்ல—இலங்கை இந்தியர் பிரச்சினையில் இந்தியப் பேரரசின் அக்கரையின்மையும், கவனக் குறைவும் கூடத்தான் காரணமாகும்.

எனவே வெள்ளை ஆப்பிரிக்க சர்க்காரின் நிறத்திமிரை கண்டிக்கும் துணிவை இலங்கை திராவிடர் பிரச்னையில் காட்ட நேரு பண்டிதர் மனவளம் பெறவில்லையா அல்லது ஓரவஞ்சனையா என்று கேட்கிறோம்.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர்களுக்கு

●

வணக்கம்! 10-4-55-ல் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயற்குழு தேர்தல் காஞ்சீபுரம் திராவிட நாடு நிலையத்தில் பகல் 2-30 மணிக்கு தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தேர்தல் அதிகாரியாக இருந்து நடத்தி வைப்பார்கள். ஆதலினால் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிளைக் கழக மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் தவறாது தேர்தலில் கலந்து கொண்டு முறையே செயலாளர் துணைச்செயலாளர் பொருளாளர் ஆகியோர்களை தேர்ந்தெடுப்பதோடு பொதுக்குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பதற்கு தவறாது வருகை தந்தருள வேண்டுகிறேன். அவற்றோடு கிளைக் கழகத் தோழர்கள் தலைமை நிலைய ஒப்புதல் அஞ்சலையும் உடனெடுத்துவர வேண்டுகிறேன்.

அன்பன், சி. வி. எம். அண்ணாமலை
செயலாளர் தி. மு. க. செங்கற்பட்டு மாவட்டம்

நடக்க இருப்பவை

மேட்டு மகாதானபுரம் தி. மு கழகம்

8—4—55 வெள்ளி மாலை 4 மணிக்கு மேட்டு மகாதானபுரத்தில் புதிதாக நிர்மாணித்திருக்கும் தி. மு. க. அலுவலகத் திறப்புவிழா பொ. சங்கரம் பிள்ளை தலைமையில் நடைபெறும், தோழர் என். வி. நடராசன் கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுவார், மற்றும் தோழர்கள் சி. வி. முத்துகிருஷ்ணன், அன்பில் தர்மலிங்கம், இளமுருகு பொற்செல்வி பேசுவர்.

புதுப்பட்டி தி. மு. கழக ஆண்டுவிழா

8-4-55 வெள்ளி மாலை 6-30 மணிக்கு கடைவீதி அடுத்த திடலில் ஆண்டுவிழா நடைபெறும். தோழர் என். வி. நடராசன் அவர்களும் மற்றும் பல தோழர்களும் பேசுவர்

சாத்தூர் நகர தி. மு. கழகம்

சாத்தூர் பொதுத் திடலில் 9-4-55 சனி மாலை 6-மணிக்கு மாபெருங் கூட்டம் நடைபெறும், தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், எஸ். எஸ். தென்னரசு, ஆர். பி. சன்யாட்சென், ஜி. எ. எஸ். சுந்தரம் பேசுவர்.

திருச்சி வள்ளுவர் மன்ற ஆண்டுவிழா

9-4-55 சனி மாலை 5-மணிக்கு திருச்சி கருணாநிதி பூங்காவில் தோழர் என். ஜே தேவதாஸ் எம்.எ. அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு. அன்பில் தர்மலிங்கம் பேசுவர்

நாச்சியார் கோவில் தி. மு. கழக ஆண்டுவிழா

9-4-55 சனி மாலை 6-மணிக்கு கீழவீதி தேரடி அருகில் வலங்கைமான் அரங்கண்ணல் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என், வி. நடராசன். ஜி. நாராயணசாமி பேசுவர்

மதுரை நிகழ்ச்சிகள்

9—4—55 சனி இரவு 10 மணிக்கு பழனி டாக்கீஸில் 'நிலவு ஆசிரியர் பூ. கணேசன் தலைமையில் எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரின் 'மகாராணி' நாடகம்

10—4—55 ஞாயிறு காலை 10 மணிக்கு விக்டோரியா எட்வர்ட் ஹாலில் இரா. நெடுஞ்செழியன் ஆகும் நெறி எது! ஆகா நெறி எது! பற்றிப் பேசுவார். நன்கொடை அணா 8. 4.

பிற்பகல் 2 மணிக்கு இரா. நெடுஞ்செழியன் தலைமையில் மதுரை மாவட்ட தி.மு. கழக தேர்தல்.

மாலை 6 மணிக்கு திலகர் திடலில் இரா. நெடுஞ்செழியன், எஸ். முத்து ஆகியோர் பேசுவர்.

மாயூரம் தி. மு, கழகம்

10-4-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு நகரப் பூங்காவில் பொதுக்கூட்டம் நடைபெறும், தோழர் என். கிட்டப்பா தலைமை வகிப்பார். தோழியர் சத்தியவாணி முத்து அம்மையார், கே. கே. நீலமேகம், என். எஸ். இளங்கோ, மன்னை நாராயணசாமி பேசுவர்.

ஆம்பூர் நகர தி. மு. கழகம்

10—4—55 ஞாயிறுமாலை 6-30 மணிக்கு மாபெருங் கூட்டம் நடைபெறும். தோழர் எ. எஸ். சி. கிருஷ்ணசாமி தலைமைவகிப்பார். தோழர்கள் என். வி. நடராசன், சி.பி. சிற்றரசு, ப. உ. சண்முகம் நெடுஞ்சோழன் போளூர் சுப்ரமண்யம்பேசுவர்

பம்பாய் தி. மு. கழகம்

10—4—55 மாலை 6 மணிக்கு திராவிடரகத்தில் பொருளாளர் ஒரு செயற்குழு உறுப்பினர் ஆகியோருக்கு துணைத்தேர்தல் நடைபெறும், இதையே அழைப்பாகக் கொண்டு கழக உறுப்பினர்கள் தவறாது கலந்துக் கொள்ளுமாறு செயலாளர் ஆரிய சங்காரன் அறிவிக்கிறார்.

ஒடைப்பட்டி தி. மு. கழகம்

13—4—55 புதன்கிழமை மாலை 7- மணிக்கு வானொலி திடலில் தோழர் கே. சின்னையன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். கவிஞர் எம். எஸ். ராமசாமி சொற்பொழிவாற்றுவார்.

பெங்களூர் அக்கிப்பேட்டை தி. மு. க.

10—4—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு பெங்களூர் சிட்டி சிக்கலாவ் பாக்கில் தோழர் சி. உலகநாதன் தலைமையில் நாஞ்சில்நாடு தோழர் கி. மனோகரன், மு. கோ. வேந்தன் ஆகியோர்பேசுவர்.

வரலாற்றுச் சித்திரம்

பேசும் மண்டையோடு

கோவை. இரத்தினம்

ஆம் தோழர்களே! நான்தான்—மண்டையோடு பேசுகிறேன்! வீதியிலே வித்தைக்காரன் வைத்து, வயிற்றுப் பிழைப்புக்காக வேடிக்கை காட்டுகிருனே, அந்த விளையாட்டு மண்டையோடோ என்று என்னை எண்ணி விடாதீர்கள்! வீழ்ந்துபோன ஒரு சமுதாயம் தலைநிமிர ஒரு நாட்டின் புதியதோர் சரித்திரத்தை உருவாக்க முயன்ற இலட்சிய மண்டையோடுதான் நான்.

எனது வரலாறு சோகம் நிரம்பியது! வீரம் விளைந்தது. அதை நான் சொல்வதென்ருல் இன்றைக்குச் சரியாக 136 ஆண்டுகளுக்கு முன்பு சென்ருக வேண்டும்! ஏனென்ருல் நான் வாழ்ந்த காலம், நான் சொல்லப் போகும் சம்பவங்கள் நிகழ்ந்த காலம் அதுதான்.

உலகுக்கே நாரீகம் கற்றுத் தந்த ஒப்பற்ற திருவிடத்தின் நேர் தெற்கே உள்ள எழில்மிகு பூஞ்சோலை அழகுத் திருநாடு! இலங்கைதான் எனது தாயகம். நாற்புறமும் ஆழ்கடல் சூழ்ந்த அந்த மண் மாதாவின் மடியிலேதான் நான் பிறந்தேன்—வளர்ந்தேன்! என்னுடைய பெயர் **கேப்பிட்டிபொலதி சாவா!**

நான் தவழ்ந்து விளையாடிய இலங்கைப் பூமி என் அன்னைத் தாயகம்—நீண்டநாளாக மாற்ருரின் பிடியில்—வெள்ளையரின் ஆதிக்கத்தில் சிக்குண்டு, சொல்லொணு வேதனை அனுபவித்து வந்தது! அந்த ஏகாதிபத்தியக் கொடுங்கோலர்களின் சுகபோக வாழ்க்வுக்காக எனது தாயக மக்கள், தங்கள் இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்தனர்!

உல்லாச உப்பரிக்கையிலே சல்லாப லீலைகள் நடத்தியது எங்கிருந்தோ வந்த கூட்டம்!

உழைத்துக் களைத்த எங்களுக்குக் கிடைத்ததோ வறுமையாம்! நாங்கள் பூணுவதோ பொறுமையாம்!!

சூதுமதியினரின் இந்த சொகுசு வார்த்தைகள், எங்கள் உள்ளத்திலே நீண்ட நாளாகப் புகைந்து கொண்டிருந்த உரிமைப் புகைச்சல் பெருநெருப்பாக உருவாக உதவியது! சொந்த நாட்டுக்காரன் சோற்றுக்குக் கூக்குரலிடுகிருன்; எங்கிருந்தோ வந்தோன் எங்களை ஏமாற்றி வாழ்கிருன்! இந்த நிலையைக் கண்டால், எவரது உள்ளமும் எரிமலையெனக் கொதித்தெழத்தான் செய்யும்! அதற்கு நாங்கள் மட்டும் விதிவிலக்காக முடியுமா என்ன?

ஆதிக்கவெறியினரது அதிகார அம்புகள், ஏகாதிபத்தியக் கொடுங்கோன்மைகள் அதிகரிக்க அதிகரிக்க எங்கள் உள்ளத்திலே நீண்ட காலமாக வேர்விட்டுவரும் சுதந்திர ஆர்வம், புரட்சித் தீ கொழுந்து விட்டெரிந்தது!

நாட்டுக்காக உழைத்த நல்லவர்கள், அன்னைத் தாயகத்தின் அடிமைத் தளையகற்றும் அருப்பணிக்குத் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டோர், அதற்கென இன்னுயிரையும் ஈந்த இலட்சக் கணக்கான கொள்கை வீரர்கள் ஆகியோரது வீரம் நிரம்பிய விடுதலை வரலாற்றை, உலகத்தின் நாட்குறிப்பாம் சரித்திர ஏடுகளிலிருந்து கற்றவர்கள்தான் நானும், என் தோழர்களும்! அத்துடன் இதயத்தின் அடித்தளத்திலேயிருந்து பீரிட்டெழும் விடுதலை வேட்கையை அடக்க எந்த சக்தியாலும் முடியாது என்பதையும் நான் நன்குணர்வேன்!

துப்பாக்கி முனையைக் காட்டியோ, தூக்குமேடையின் சுருக்குக் கயிற்றின் வடிவத்தைக் காட்டியோ, ஒரு நாட்டினருடைய விடுதலை யுணர்ச்சியைத் தடுத்து விடலாம், துப்பாக்கியிலிருந்து வெடித்துக் கிளம்பும் வேட்டுச் சத்தத்தின் ஒலியிலே, விடுதலைப் படையினரின் விரமுழக்கம் மறைந்து விடும் என்றுதான் ஒவ்வொரு கொடுங்கோலனும் எண்ணுகிருன்! ஆனால் அவனது எண்ணம் என்றுமே நிறைவேறியதில்லை!! இது நான் கூறுவதல்ல; வரலாற்று ஏடுகள் சொல்கின்றன!!!

பிரிட்டிஷாரின் பிடியில் சிக்கி, என்னருமை நாட்டு மக்கள் துவண்டு விழுவதைக் கண்டேன்! அப்பாவிகளான எனது நாட்டு மக்களைக் கொன்று குவித்து, "பாரீர் எங்கள் வீரத்தை!" என்று கொக்கரிக்கும் கோணல்மதி படைத்தோரின் கொடுமைகளைக் கண்டேன்! அன்னைத்தாயகம் அழுது புலம்புவதைக் கண்டேன்! நமது தாயக மண்ணிலிருந்து அன்னியரை விரட்டியடித்தேயாக வேண்டும் என்று சபதம் எடுத்துக் கொண்டேன்!

படிக்கு முன் !

●

சின்னஞ் சிறிய மண்டையோடு! அது சொல்லும் கதையோ, அப்பப்பா! மிகப் பெரிது!! ஆம்! அதனுள் ஒருநாட்டின விடுதலைச் சரித்திரமே அடங்கிக் கிடக்கிறது!

இன்றைக்குச் சரியாக 136 ஆண்டுகளுக்கு முன்பு கண்டியின் (இலங்கை) சுதந்திரத்துக்காக, அன்றைய ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஆயுதப் புரட்சி நடத்தினன், **கெப்பீட்டி பொலதி சாவா** என்னும் வீரஇளைஞன்! அவனது தலையை வெட்டி, மண்டையோட்டை லண்டனிலுள்ள கண்காட்சி ஒன்றில் கொண்டு வைத்தனர் பிரிட்டிஷார்.

அண்மையில் இலங்கை சுதந்திரம் அடைந்ததும், முதல் காரியமாக அம்மண்டையோட்டை திரும்பப்பெற்று, நாடு முழுதும் ஊர்வலமாகக் கொண்டு சென்று கண்டியில் அதற்கென நிறுவப்பட்டுள்ள நினைவு மண்டபத்தில், சென்ற இரு மாதங்களுக்கு முன்பு புதைத்தனர்!

அன்னிய ஏகாதிபத்தியத்தை தனது தாயக மண்ணிலிருந்து விரட்ட அந்த இலட்சியக் காளை எடுத்துக் கொண்ட முயற்சிகளை அந்த மண்டையோடே கூறுவதுபோல சுவைபடத் தீட்டியுள்ளார் இக்கட்டுரையை கோவை க. இரத்தினம்!

விடுதலைகோரி நிற்கும் நமதருமைத் திருவிடத்துக்கு இதுபோன்ற விடுதலை வீரர்களது வீரம் ததும்பிய வரலாறுகள் மிகமிகத் தேவை என்று கருதுகிறேம். மண்டையோடு கூறும் இந்த வரலாறு விடுதலை விரும்பிகளுக்கு வீசும் தென்றல்! மாற்ருருக்கோ மருட்டும் புயல்!!

எனது முழுமூச்சான உழைப்பால் உருவாயினர், எதையும் தாங்கும் இதயங்கொண்ட இலட்சி வீரர்கள்! நாடெங்கும் புயல் வேகப் பிரசாரம்! ஆங்கிலேயரிடமிருந்து எனது மக்கள்—எனது தாயகம்—விடுதலை பெற்று இலங்கை கண்டியில் மீண்டும் சுதந்திரக் குடியரசு நிறுவ வேண்டும்! இதுவே எனது முழக்கம்—இலட்சிய கீதம்.

ஒரு குறிப்பிட்ட தினத்தில் நாடெங்கும் ஆட்சியினருக்கெதிராக ஆங்காங்கே கிளர்ச்சிகள் மூண்டது. நானும் எனது தோழர்களும் கண்டியில் போரிட்டோம்—இன்று நேற்றல்ல. 136 ஆண்டுகளுக்கு முன்பு.

எனது தோழர்களும் நானும் வீராவேசமாகப் போராடினேம். என்ருலும் வெள்ளையரது நவீன ஆயுதங்களின் முன்புஎங்களால் நிற்க முடியவில்லை. என் படைகள் பின்வாங்க நேரிட்டது, ஆனால் எதிர்பாரா... மாக ஒருசில இராவணன் தம்பிகளா... அவர்களிடம் சிக்க நேர்ந்தது.

தாயகத்தின் தளையறுக்க எ... எனக்கு, அன்றைய ஆங்கில ஆட்... கொடுத்த பரிசு என்ன தெரியுமா? சிரச்... ஆம்! **26—11—1818-ல்** நான் தலை து... கப்பட்டேன்!

வெட்டுண்ட என்னையாவது ... நாட்டு மக்களிடத்திலே ஒப்படை... களா? அதுதான் இல்லை! அல்லது ... மும் தன் அலைக்கரங்களை நீட்டி ஆர்... துக் கொண்டிருக்கும் ஆழ்கடலில் ... சுருமீன்களுக்காவது உணவாக எறி... கலாம்! ஆனல் அந்த ஆணவத்தின் ... வுருவங்கள் அதையும் செய்யவில்லை! அ... மாருக எனது மண்டையோட்டை ... டன் **எடிங்பர்க்கிலுள்ள மனுேதத்துவ சங்க...** **காட்சியில்** கொண்டுபோய் வைத்தனர்! ... பலதரப்பட்ட மக்கள், பல நாட்டு ம... கள், மந்திரிகள் ஆகிய அனைவரும் என்... பார்த்தனர்! "விடுதலை விரும்பி" எ... சிலர் போற்றினர்; "அகண்ட பிரி... சாம்ராஜ்யத்தையே எதிர்த்தவன்" எ... பலர் தூற்றினர்!

"சுதந்திரம்—தாயக விடுதலை—எ... பணிபுரியும் விடுதலை விரும்பிகள், ஏ... பத்தியவாதிகளை எதிர்க்க முனைந்தால் ... களது முடிவு இப்படித்தான் இருக்... என்று விடுதலை கோரி நிற்கும் நாடுக... சுதந்திர விரர்களுக்கு எச்சரிக்கை வி... போலிருந்தது அவர்கள் என்னை ... திருந்த காட்சி!

காலமெல்லாம் கண்ணீர் வடி... கொண்டு, அன்னைத் தாயகத்தை அடி... யும் என் நாட்டு மக்களை நினைத்து ... புலம்பிக் கொண்டே அந்தக் கண்காட்சி... வாழ்ந்தேன்!

அன்னை நாடு சுதந்திரம் பெறுமா? ... புச் சோதரர்களின் வாழ்வில் மறுமல... உதயமாகுமா? இதுவே என் இதய ஒலி... இருந்து வந்தது, அன்றிலிருந்து!

இந்த நிலையிலேதான் நான் ... இனிப்பான செய்தியைக் கேட்டேன்! எ... என்ற கேள்விக்குறி; உங்கள் உள்ளத்... முளைவிடுகிறதல்லவா? எனது வாழ்க்... சுருக்கம் இன்னும் கொஞ்சம் தான். எ... லுங்கூட இனிமேல் நான் கூறப்போ... தான் சுவையான செய்தி.

நான் எந்தக் குறிக்கோளுக்காக இ... சியத்துக்காக அன்று ஆங்கிலேய ஆட்சி... எதிர்த்தேனே அந்த இலட்சியம்—கு... கோள்—1948-ம் ஆண்டு, நிறைவேறி... டது! ஆம்! அன்றுதான் எனது இலங்... திருநாடு சுதந்திரமடைந்தது! பன்னெடு... காலத்துக்குப் பிறகு விடுதலை யடைந்த எ... அன்னைத் தாயகத்தை எண்ணி மகிழ்ந்த... கள் என்னைப்போல எவருமே இருக்க மு... யாது!

ஆனல் அந்த இன்பத்தையும் ... எனதுள்ளத்தில் ஓர் வேதனை வினு, எ... தது! ஏன்? இலங்கை நாட்டின் சுதந்திர... துக்காக முதன் முதலில் போராடி, உ... நீத்த என்னை, என் நாட்டு மக்கள் இன்... நினைவில் வைத்திருப்பார்களா? அவமா... சின்னமாக அன்னிய நாட்டிலே நான் இ... கும் இந்த அவல நிலையை உணர்ந்... எனக்கு விமோசனம் அளிப்பார்களா? இ... படி எண்ணி ஏங்கினேன்.

எனது ஏக்கத்தை உணர்ந்து கொண்டவர்கள் போல, என் மக்கள், கண் காட்சிப் பொருளாக, இருந்த என்னை விரைவி...

8-ம் பக்கம் பார்க்க

நீதி அமைச்சரின் துணிவு!

இப்பண்பு நீடிக்குமா?

'சர்விஸ் கமிஷன் போட்டிப் பரீட்சைகளில் இந்தியில் மட்டும் தான் எழுத வேண்டும் என்ற திட்டம் எதையும் சென்னை சர்க்கார் ஏற்றுக் கொள்ள முடியாது' என்று சட்டசபையில் கனம்சுப்ரமண்யம் கூறியதாகப் பத்திரிகைகளில் படித்தேன். மத்திய சர்க்கார் எதைக் கூறினாலும் அதற்கு 'ஆமாம் சாமி, போடும் பழக்கத்திலிருந்து விடுபட்டு எங்களுக்கும் சிறிது தன்மானமுண்டு' என்பதை வெளிக் காட்டிக் கொண்ட அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் இதோடு மட்டும் நின்று விடுவீர்களேயானால் கிடைத்த பாராட்டுதல்கள் நிலைத்து நிற்க முடியாது. கடந்த காலத்தில் அவரின் குருநாதர் ஆட்சிபீடத்திலமர்ந்து தாளமுத்து நடராசன் என்னும் இரு பெறும் தமிழ் வீரர்களைப் பலி கொண்ட நாளிலிருந்து, தாங்கள் அரியாசனம் ஏறி ஆட்சி செலுத்தும் இந்நாள்வரை இந்தியைப் பற்றிய எத்தகைய எண்ணம் திராவிட மக்களின் உள்ளங்களிலே இடம் பெற்றிருக்கிறது? சர்வீஸ் கமிஷன் தேர்வுகளில் மட்டும்தான் இந்தி புகக் கூடாது என அவர்கள் விரும்புகிறார்களா? அல்லது அம்மொழியைப் பொதுமொழியாக ஏற்றுக் கொண்டால் தமிழுக்கும், திராவிட மக்களுக்கும் ஏற்படும் தீமைகளை உணர்ந்து, இந்திமொழியை எந்தத் துறையிலும் புகவிடாமல் தடுத்து நிறுத்த விரும்புகிறார்களா? என்பதெல்லாம் நீதி அமைச்சருக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 'ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளில் போதனை மொழியாகவும் (**medium of Instruction**) தமிழ்தான் இருக்க வேண்டும்; பல்கலைக் கழகத்தினர் இதற்கான வழிகளை வகுக்காவிட்டால் அரசாங்கம் தலையிட நேரிடும்' என்று சென்னைப் பல்கலைக் கழகத்தினரை மிரட்டும் அமைச்சர் அவர்கள் சிறிது மனத் துணிவைவரவழைத்துக்கொண்டு தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தடை போடுவதோடு மட்டுமல்லாமல் திராவிட மக்களின் நல்வாழ்வில் காரிருளை நிரப்பும் இந்தியைப் பொதுமொழியாக ஏற்க முடியாது என்று வடவருக்குத் தெரிவிப்பார்களா? வருமா அந்தத் துணிவு? இல்லை பதவி பறி போய்விடும் எனப்பயந்து வடவருக்குப் பாதந்தாங்கும் 'திருப்பணி'யில்தான் ஈடுபடப் போகிறார்களா? மணிமுடிதரித்த மன்னர்கள் எல்லாம் மக்களின் எதிர்ப்புக்கு முன் மண்டியிட்டு மண்ணோடு மண்ணாக மக்கிப் போனதற்கு வரலாறுதரும் சான்றுகள் ஏராளம். ஆள்பவர்கள் ஆளப்படுபவர்களாகவும், ஆளப் படுபவர்கள் ஆள்பவர்களாகவும் மாறுவது இன்றைய அரசியல் வாழ்வில் எவ்வளவு சர்வ சாதாரணம் என்பதை அமைச்சரவர்கள் அறியாமலிருக்க நியாயமில்லை. எனவே இந்த நாட்டு மக்களின் எதிர்கால நல்வாழ்விற்கான ஏதாவதொரு உருப்படியான 'நல்ல காரியத்தை' அமைச்சர் சுப்ரமண்யம் ஆட்சியிலிருக்கும் போதே செய்து விட்டுப் போவார்கள் என்று நம்புகிறேன் அந்த 'நல்ல காரியம்' இந்தியை ஏற்க மாட்டோம் என் அமைச்சர் கூறுவதாக இருக்கட்டும்!

சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட தமிழ் மொழிக்கு, இடையிலே வந்து புகுந்த வடமொழியால் (சமஸ்கிருதத்தால்) எத்தகைய பங்கம் ஏற்பட்டதென்பதைத் தமிழ் கற்ற நல்லறிஞர்கள் உணருவார்சள். ஒரு காலத்தில் இமயம் முதல் குமரி வரை பரவியிருந்த நமது மொழி வடமொழியாளர்களின் வஞ்சகச் சதிச் செயல்களால் விந்தியம் வரை அதன் வடவெல்லை குறுகியதும், பின்னர் அது வேங்கடம் வரை குறுகி நிற்பதும், மலையாளம், ஆந்திரம், கன்னடம், துளு முதலிய கிளைமொழிகள் பிரிந்து சென்றதும், வரலாற்றறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை.

வணிகம் செய்ய வந்த பரங்கி வஞ்சகர்களோடு சேர்ந்து சதி செய்து நம்மையெல்லாம் அடக்கி ஒடுக்கி அடிமைகளாக்கி ஆண்ட காலத்தில், ஆங்கிலத்தை இந்த நாட்டில் புகுத்தியதால் தமிழ் தாழ்த்தப்பட்டு சிதைக்கப்பட்டு சீரழிக்கப்பட்டதெல்லாம் தங்களுக்குத் தெரியாததல்ல. எனினும் தமிழர் சமுதாயத்தில் தோன்றியுள்ள மறுமலர்ச்சியால் இன்று அந்த இனம் தனது மொழியையும் நாட்டையும் பேணிப் பாதுகாக்க முற்பட்டிருக்கும் இந்த நாளில் மீண்டும் 'இந்திச் சூறாவளி' தமிழ்ப் பூங்காவில் வீசஆரம்பித்தால் அதைக் கண்டு நாம் வாளா இருந்துவிடுவது முறையா? அந்தப் பூங்காவில் பூத்துக் குலுங்கி மணம் பரப்பும் மலர்களை மீண்டும் வாட விட்டுவிடலாமா? அமைச்சர் அவர்களே! ஆர அமர இருந்து விருப்பு வெறுப்புகளை யெல்லாம் வேறிடத்தில் ஒதுக்கி வைத்து விட்டு நடுநிலையிலிருந்து சிந்தித்துப் பாருங்கள். ஆவடியில் தாங்கள் தமிழில் பேசியதைக் கேட்டு கொதிப்படைந்த வடவர்கள்—இந்தி வெறியர்கள் கூச்சலிட்டுக் குழப்பம் செய்ததையும்—தமிழர்கள் பேசும்போது அவர்கள் வெளியே சென்றுவிட்டதையும் ஆனால் அதே நேரத்தில் தங்களுக்கு இந்தி புரியாதிருந்தும் பொறுமையாக இறுதிவரை வீற்றிருந்து தங்கள் இனத்தின் பண்பை நிலைநிறுத்திக்கொண்ட நம்மவர்களின் நற்பண்பையும் எண்ணிப் பாருங்கள். நமது நாட்டையும்மொழியையும் நாசப்படுத்துவதோடல்லாமல் நம்மையும் வடவரின்அடிமைகளாக வாழவைக்கும் அந்த இந்தி கூடாது எனக் கூறுபவர்கள் வெறியர்களா? அல்லது ஆட்சிப் பொறுப்பும் அதிகாரமும் ஆணவமும் தம்மிடம் இருக்கின்ற காரணத்தால் எப்படியும் இந்தியை இந்த நாட்டில் புகுத்தி இந்தத் திருவிடத்தை அடிமை நாடாக்கி சுரண்டுவதற்குரிய மார்க்கெட்டாக்கி, தமது சுகவாழ்விற்கு வழிவகுக்க நினைக்கும் அந்தச் சூதுமதியினர்—சுயநலக் காரர்கள்—சூதுத் திட்டம் தீட்டி வரும் சூழ்ச்சிக்காரர்கள் வெறியர்களா? இனியும் 'ஏகஇந்தியா' என்ற போர்வையிலே புகுந்து கொண்டு நாம் நமது உரிமைகளையெல்லாம் இழக்க வேண்டுமா? தன்மானத்தை வடவருக்கு அடகு வைக்க வேண்டுமா?

கடந்த காலத்தில் இசைநுணுக்கம், தாளவகையோத்து போன்ற இசை நாடக நூல்களையும் இன்ன பிற கருத்துக்களையும் இழந்து விட்டு கண்ணீர்க் கடலில் மிதக்கும் தமிழறிஞர்களுக்கு மற்றுமொரு பேரிடியாய் வருகிறது இந்த 'இந்திப் பேய்'. உயிர் கொடுத்தேனும் மொழி வளர்ப்போம் என உறுதிபூண்டு உழைத்துவரும் அவர்கள் 'ஓடிவரும் இந்திப் பெண்ணை' ஓட ஓடச் சாடி, சாகடிக்காமல் விடமாட்டார்கள். பொறுத்திருந்து பெற்ற 'பெருமை' போதுமென்றெண்ணி பொங்கும் கடலென புறப்பட்டு விட்டது தமிழர் படை. ஆமாம் மொழிப் போர் தொடங்கிவிட்டது. இந்தியை ஏற்கமாட்டோம்' எனக் கூறிவிட்டுத் தாங்கள் தமிழர் படையின் முன்னணி வீரராக விளங்குவீர்களா? அரசியல்வேறுபாட்டை அகற்றிவிட்டு மொழிப் போரிலே அமைச்சரும் அவரைச் சார்ந்தோரும் ஒன்றுபட்டுப் பங்கேற்று போராட வருவார்களா?

—ப. வெங்கட்ராமன்

●

மாஸ்கோ பாகவதர்கள்!

ராமாயணத்தின் பெருமையைக் கூறி தப்பட்டை அடிக்கப் போகிறார்களாம்!

கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் ஜீவானந்தம் சென்ற ஆண்டு கம்பன் திருநாளின் போது ஆச்சாரியாரின் ராம பஜனைக்குப் பக்க மேளம் கொட்டி அதிலே பொதுவுடமைக் கொள்கையை உறிஞ்சி எடுத்தாரல்லவா?

அதுபோலவே—இந்த ஆண்டும் (7-4-55) காரைக்குடியில் தமது சகாவுடன் கம்ப ராமாயணப் பெருமையைக் கசக்கிப் பிழிந்து எடுத்து அந்த எஸ்ஸென்ஸை மாஸ்கோ வைத்தியத்திற்குப் பயன்படுத்தப் போகிறாராம்!

நம்நாட்டில் இதுவரை பொதுவுடமைக் கருத்து வளராததற்குக் காரணம், ராமாயண எஸ்ஸென்ஸ் தேவையான அளவுக்கு கிடைக்காததினால்தான் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் மேலிட 'வெகுஜன' அபிப்ராயம் மூலம் உணர்ந்திருக்கிறதாக மாஸ்கோ மருத்துவத்துக்கு சென்று வந்த ஒரு கம்யூனிஸ்ட் நோயாளி குறைந்த பட்ச அறிவின் மூலம் தெரிவித்தாராம்!

எனவே இவ்வாண்டும் காரைக்குடியில் தற்போது நடைபெற்று வரும் ராமாயண மாநாட்டுக்கு தென்னாட்டு கம்யூனிஸ்ட் கட்சி மாஸ்கோ பாகவதர்களை அனுப்பியிருக்கிறது. அந்த பாகவதர்கள் தான் தோழா ப. ஜீவானந்தமும். ராமகிருஷ்ணனும்!

கம்யூனிஸ்டுகளின் இந்த ஆண்டு ராம பஜனைக்குப்பின் அடுத்த பொதுத்தேர்தலில் வெகுஜன ஆதரவு மேலும் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

—நக்கீரன்

●

சென்னை 8-வது வட்டம்

20-3-55 காலை 9 மணிக்கு சென்னை பெத்து நாய்க்கன் பேட்டை (8-வது வட்டம்) தி. மு. க வின் சார்பில் வீ. எஸ். கோவிந்தராசன் அவர்கள் தலைமையில ஐந்தாண்டுத் திட்ட கண்டன ஊர்வலம் நடந்தேறியது. அவ்வமயம் சி. ஆர். பாலசுந்தரம், சென்னை மாவட்ட துணைச்செயலாளர் ராமசாமி மற்றும் ஏராளமான கழகத் தோழர்களும் பொது மக்களும் கலந்துக் கொண்டனர்.

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92, தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

கம்யூனிஸ்டுகளே!

அரசியல் துறையில் குருட்டுப்பாடம் வேண்டாம்!

"மார்க்ஸ்—லெனின் கொள்கைகளை நன்ருக உணர்ந்த இயக்கமே, நம்பிக்கையாக உழைக்கும் வர்க்கத்தாரை முன்னுக்குக் கொண்டு வர முடியும். மார்க்ஸ்—லெனின் கொள்கைகளை நன்ருக உணர்தல் என்ருல் என்ன! இது சிந்திக்க வேண்டிய பிரச்னே. மார்க்ஸ், ஏஞ்சல்ஸ், லெனின் இவர்களின் முடிவுகள், கொள்கைகள் முதலியவைகளை மிகப் பக்தியுடன் சிரமப்பட்டு மனப்பாடம் செய்து சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவைகளிலிருந்து மேற்கோள் காட்டிவிட்டு மற்ற நேரங்களில் அவைகளை மூட்டைகட்டி போட்டு விடுவது என்பதல்ல. மார்க்ஸ்—லெனின் கொள்கைகளை உணர்வது என்பது. இவ்வண்ணம் மார்க்ஸ்—லெனின் தத்துவத்தை அணுகுவது முற்றிலும் தவறு. மார்க்ஸ்—லெனின் கொள்கைகள் குருட்டுத்தனமாக மதக் கட்டளைகள் போல் நம்ப வேண்டிய சித்தாந்த தொகுப்புபோல் கருதப்படக் கூடாது.

அக் கொள்கைகள் சமுதாய வளர்ச்சி அறிவியலாகவும், பொதுவுடமை சமுதாயத்தை நிறுவப் பயன்படும். அறிவியல் வளர்ச்சியாகவும் கருதப்பட வேண்டும். அவைகளின் வளர்ச்சி புது அனுபவங்களுக்கும், புது அறிவிற்கும் வளைந்தே செல்கிறது. இதனுல் மார்க்ஸ்—லெனின் தத்துவங்களின் சில முடிவுகளும், தீர்மானங்களும் காலத்தின் வளர்ச்சியிலே மாறவேண்டியிருக்கும். சில சமயங்களில் வரலாற்று நிலைகளுக்கு (Historical Conditions) ஏற்ப சில முடிவுகளை நீக்கி வேறு புதிய முடிவுகளைச் சேர்க்க வேண்டியிருக்கும். அக் கொள்கைகளின் சாரத்திற்கும் அவைகள் எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்களுக்கும் உள்ள வேறுபாட்டை அறிய முற்படுகிறவனே உண்மையான கொள்கைப் பற்றுடையவன். மார்க்ஸ்—லெனின கொள்கை குருட்டு நம்பிக்கையாகப் பின்பற்ற வேண்டிய மதக் கட்டளைகள் போன்றதல்ல; அது செயலாற்றுவதற்குரிய ஒரு வழிகாட்டியாகும்."

மேலே தரப்பட்டிருக்கும் கருத்துரைகள், 'திராவிட நாடு' பத்திரிகையோ 'திராவிடன்' பத்திரிகையோ தீட்டிய தலையங்கமல்ல திராவிட இயக்கத் தலைவர்கள் அரசியல் மேடையிலே சிந்திய கருத்து முத்துக்களுமல்ல கொடுக்கப்பட்ட கருத்துக்கள் இந்நாட்டுப் பொதுவுடமையரின் புது அரசியல் நடையைக் கண்டிக்கும் திராவிட இயக்கத்தாரின் நன்மொழிகள் போல் காணப்படுகிறதே என்று கேட்கத் தோன்றும்—(இரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு History of the Communist Party of the Soviet Union) என்ற புத்தகத்தில் இருந்து எடுத்த கருத்துக்களே மேலே தீட்டியிருப்பது. அப்புத்தகத்தின் முடிவுரையில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களே அவைகள். அப் புத்தகம் மாஸ்கோவில் வெளியானது. நம் நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கைகளையும், செயல்முறைகளையும் பார்க்கும்போது இவர்களுக்காகவே இக்கருத்துரைகளை அப்புத்தகத்தில் சேர்த்தார்களோ என்ற ஐயம் கொள்ளவேண்டியிருக்கிறது.

திராவிட நாடு பிரிந்தால்தான், வடநாட்டின் சுரண்டலிலிருந்து தென்னகம் விடுபட்டு இங்கே ஒரு வர்க்க பேதமற்ற உண்மையான சோஷலிச சமுதாயத்தை ஏற்படுத்த முடியுமென்று திராவிடர் இயக்கம் கருதுகிறது. திராவிட நாடு பிரிய வேண்டுமென திராவிடர் இயக்கம் கூறுகிறதே யொழிய பிரிந்த நாட்டிலே முதலாளித்துவம் கோலோச்ச வேண்டுமென்று கூறவில்லை. மாருகத் திராவிடத் தனிஅரசிலே நாட்டின் சூழ்நிலைக்கேற்ற அளவு மார்க்ஸ் மணம் கமழ வேண்டுமென்றே விரும்புகிறது.

நம்நாட்டுப் பொதுவுடமையினர் நம்மைப் பார்த்து, நாட்டுப் பிரிவினை ஏன் வேண்டும். பாரதம் முழுமைக்கும் சமதர்ம ஆட்சி வந்து விட்டால் வடநாடு, தென்னுடு என்றபேதமே தீர்ந்துவிடும், திராவிட நாடு பிரச்னே என்ற இல்லாத ஒன்றை மக்களிடையே சொல்லி அவர்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பி அரசியலைக் குழப்பி உழைக்கும் வர்க்கம் உயர்வதற்குத் தடையாக இருக்கின்றனர் என்று நம்மைக் குறை கூறுகின்றனர். மக்கள் வறுமைப்புயல் நீங்கப்பாடுபடுவது முக்கியமா! திராவிடநாடு பிரிவினை முக்கியமா! என்று நம்மை ஏளனம் செய்கின்றனர். உயர்ந்த பொருளாதார வளப்பம் பொருந்திய வடநாடும், தொழில் வளத்தில் முன்னேருக தென்னுடும் ஒரே ஆட்சியில் இருந்தால்—அந்த ஆட்சி முறை எவ்வித முறையாக இருந்தாலும் சரி, அந்த ஆட்சி காங்கிரஸ் கையில் இருந்தாலும் சரி. கம்யூனிஸ்ட் கையில் இருந்தாலும் சரி தென்னுடு சுரண்டப்படும் நாடாகவே இருக்கும்.

மார்க்ஸ் கொள்கைகளை எழுத்திற்கு எழுத்துப் பாராமல் இந்நாட்டின் அமைப்பு முறைக்கு ஏற்றவாறு இப்பிரச்னேயை சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். அதைவிட்டு விட்டு நாட்டிலே மார்க்ஸ் மணம் பரவி வறுமைப் புயலை ஓட்ட வேண்டிய நேரத்திலே திராவிட நாட்டுப் பிரச்னே முக்கியமா! என நம்மைக் காய்கின்றனர் இந்த நாட்டில் பொதுவுடமை மலர வேண்டுமானுல் திராவிட நாட்டுப் பிரிவினை மிகமிகத் தேவை. அதன் அடிப்படையில்தான் மார்க்ஸ் சித்தாந்தம் நிலைபெற முடியும் அதற்கு ஏற்ற வகையில் அதை மாற்றிக் கொள்ள நாம் பயப்படத் தேவையில்லை அமெரிக்க நாட்டு தொழிலாளர்களின் இயக்கத்தை முன்னேற்றுவதற்கு அமெரிக்காவிலே சென்று உழைத்த ஜெர்மானிய மார்க்ஸ்வாதிகளின் குறைகளை கண்டித்து ஏஞ்சல்ஸ் எழுதியது நம் நாட்டு. பொதுவுடமை வாதிகளுக்கு இதோ படையல் செய்யப்படுகிறது:—"ஜெர்மானியர்கள் தங்கள் கொள்கைகளை எப்படி அமெரிக்கா கண்டத்தில் புகுத்துவது என்பதை நன்ருகப்புரிந்து கொள்ளவில்லை. மார்க்ஸ் கொள்கைகளை அவர்கள் பயபக்தியுடன் போற்றப்படும் குருட்டு நம்பிக்கையாகக் கருதினரேயொழிய செயல்முறையின் வழிகாட்டியாகக் கொள்ளவில்லை" அக்கடிதத்தின் ஆங்கில வாசகம் இதோ:—

The German's have not understood how to use their theory as a lever which could set the American masses in motion. They do not understand the theory themselves for the most part. To them it is a Credo and not a guide to action.

—(Le Her to Sorge November 29, 1886)

அரசியல், பொருளாதார, வரலாற்றுச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மார்க்ஸ் தத்துவத்தின் ஒரு சில கொள்கைகளை மாற்றுவதில் தவறுயாதொன்றுமில்லை.' ஆனுல் நம்நாட்டுக் கம்யூனிஸ்டுகளோ இதை தங்கள் புத்தியில் பதிய வைத்துக் கொள்ளாமல் நம் திராவிட நாட்டுப் பிரச்னேயையும், இதர சமுதாய சீர்திருத்த பிரச்னேயையும் மார்க்ஸ் கொள்கைக்குப் புறம்பானது போல் கருதி நம்மை ஏளனம் செய்கின்றனர்; அவர்கள் போக்கு விசித்திரமாக உள்ளது.

திராவிட நாடு என்று ஒருநாடு சங்க இலக்கியங்களிலே குறிக்கப்பட்டிருக்கிறதா! திராவிடம் என்ற சொல் சங்க இலக்கியத்திலே காணப்படுகிறதா! நீங்கள் திராவிட நாடு கேட்பது நியாயமா என்று கம்யூனிஸ்டுகள் கேட்கின்றனர், சாதாரண காம்ரேட்டுகளிலிருந்து பெரும் தலைவர்கள் வரை இக்கேள்வியைக் கேட்டு பெருமைபட்டுக் கொள்கின்றனர். உலக அரசியல் அறிஞர்கள் நிரம்பிய நீதிமன்றத்திலே திராவிட நாடு பிரிய வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னே விவாதத்திற்கு வந்திருப்பதாக வைத்துக் கொள்வோம். நண்பர் ஜீவா திராவிட நாட்டுப் பிரிவினை தேவையில்லை. என்று வாதாடுவதாகவும், நம் கழகப் பிரதிநிதி பிரிவினை அவசியம் என்று வாதிடுவதாகவும் வைத்துக் கொள்ளுவோம். ஜீவா தன் வாதத்தில் எடுத்தவுடன் திராவிட நாடு என்ற ஒரு நாடு தமிழர்கள் போற்றும் சங்க இலக்கியங்களில் கிடையாது. ஆகவே திராவிட இயக்கத்தார் கோறும் திராவிட நாடு அர்த்தமற்றது என்பார். இதைக்கேட்டவுடன் விவாத மேடையில் தலைவராக அமர்ந்திருப்பவர் யாது சொல்வார் தெரியுமா! தோழர். ஜீவா போதும் 'உங்கள் ஆர்க்மெண்ட்' முதலில் தங்கள் ஊரில் உள்ள சிறந்த பைத்தியக்கார மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு மறுபடியும் வாருங்கள் என்று அனுப்பி விடுவார். கம்யூனிஸ்டுகளின் வாதம் எவ்வளவு அர்த்தமற்றதாக உள்ளது என்பதை மக்கள் உணர வேண்டும். ஒரு நாட்டின் அரசியல் தொடர்புகள், அந்நாட்டின் வரலாறுடன் இணைந்து வருமே ஒழிய இலக்கியத்துடன் வராது. இலக்கியத்திற்கும், அரசியலுக்கும், உள்ள இடைவெளிமிக அகன்றது. இன்றுள்ள அரசியல் சிக்கல்களில் ஒரு நாட்டின் எல்லைக்கோடுகள் எப்படி எப்படியோ மாறுகின்றன. வரலாற்றைப் பின்பற்றிதான் நாடுகளின் எல்லைக் கோடுகளை நிர்ணயம் பண்ண முடியுமே தவிர இலக்கியங்களை வைத்து அதைச் செய்ய முடியாது.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி வர வேண்டுமென கம்யூனிஸ்டுகள் விரும்புகின்றனர். ஆகவே இந்தியா என்ற ஒரு நாட்டை ஒப்புக் கொண்டவராகின்றனர். அவர்கள் தங்கள் ஊழியத்தை அந்த நாட்டிற்கே ஒப்படைத்தவர் ஆகின்றனர். பண்டைய இந்திய இலக்கியங்களிலே இந்தியா என்ற ஒரு நாட்டின் பெயர் குறிக்கும் வார்த்தையை கம்யூனிஸ்டுகள் காட்ட முடியுமா! வால்மீகி எழுதிய இராமாயணத்தில் இந்தியா என்ற நாடு குறிப்பிடப்பட்டுள்ளதா! காளிதாசன் தீட்டிய சாகுந்தலத்திலே இந்தியா என்ற சொல் உண்டா! அல்லது கம்யூனிஸ்டுகளுக்கு இன்று காதல் பிறந்துள்ள கம்ப ராமாயணத்திலாவது இந்தியா என்று ஒரு நாடு குறிக்கப் பட்டுள்ளது என்று ஆதாரம் காட்ட முடியுமா! பண்டைய இந்திய இலக்கியங்களிலே இந்தியா என்ற ஒருநாடு குறிப்பிடப்படாமல் இருக்கும்போது கம்யூனிஸ்டுகள் மாத்திரம் இந்தியாவிற்கு பொருளாதார விடுதலை கோறுவது எப்படி நியாயமாகும் என்று நாம் திருப்பிக் கேட்கலாம். ஆனுல் அவர்களைப்போல் நாம் அரசியல் ஞான சூனியங்கள் அல்ல. சங்க இலக்கியங்களிலே திராவிட நாடு குறிக்கப்பட்டிருந்தால் தான், நமக்கு திராவிட நாடு கேட்க உரிமை உண்டென கம்யூனிஸ்ட்கள் கூறினுல் "ஐக்கிய தமிழகம்" என்ற சொற்ருெடரை எந்த சங்க இலக்கியங்களிலிருந்து கம்யூனிஸ்ட்கள் எடுத்தனர்! கற்றறிந்தோர் எத்தும் கலித்தொகையிலா! நற்றிணையிலா! நல்ல குறுந்தொகையிலா! பத்துப்பாட்டிலா! எட்டுத்தொகையிலா! எ... இருக்கிறது. ஐக்கியத் தமிழகம் என... சொற்ருெடர்!

அவர்கள் குறிப்பிடும் ஐக்கியத் தமி... கத்திற்குச் சங்க இலக்கியங்களிலிரு... எல்லைகள் காண்பிக்க முடியுமா! இன்றைக்குள்ள மொழி, கலை, பண்பா... வழியாக ஐக்கிய தமிழகம் என்ற ... நிலப்பகுதி அமைய வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனரே தவிர சங்க காலத்து தமிழகத்தின் நிலப்பரப்பை இன்று கண்டு எல்லைக் கோடு வகுக்க முடியுமா!

சங்க இலக்கியங்களிலே திராவிடம் என்ற சொல்லோ அல்லது திராவிட நாடு என்ற சொற்ருெடரோ இரு... இருக்க முடியாது என்று எப்படி துணிந்து சொல்ல முடியும், சங்க காலத்தில் தோன்றிய எத்தனையோ நூல்கள் கடலால் கொள்ளப்பட்டு அழிந்து... சூழ்ச்சியால் பல நூல்கள் அழிந்து... இருக்கின்றன அப்படி அழிந்த ... களில் ஏதாவது ஒன்றில் திராவிடம் என்ற சொல் இருந்திருக்கலாமல்லவா! சங்க இலக்கியங்களில் ஒன்ருகிய புறநானூற்றில் திரு. உ. வே. சாமிநாதையர் அவர்களால் தொகுக்கப்பட்ட ப... பில் 267, 268–ம் பாட்டுகள் முற்றிலும் கிடையாது. 328–ம் பாட்டிற்கும் 37– பாட்டிற்கும் முற்பகுதி கிடையா... 244, 355, 361 ம் பாட்டுகளுக்கு ... பகுதிகிடையாது. இடையில் சில ப... கள் இல்லாத பாட்டுகள் ... இருக்கின்றன. மேலே குறிப்பிட்ட ... பாட்டுகளில் ஏதாவது ஒ... த்தில் ... விடம் என்ற சொல் இருந்திருந்தா... இருந்திருக்கலாமல்லவா! இல்லாம... இருக்கலாம், ஆகையால் எப்படி தி... மாக சங்க இலக்கியங்களில் அச்சொ... இல்லை, இருந்திருக்காது என்று சொ... முடியும்!

எனவே 'ஒரு கட்சி சக்தி வா... தாக இருகக வேணடுமானுல் ம... ளோடு இயந்து அவர்களோடு ... கிய தொடர்புடன் இருக்க வேண்... என லெனின கூறுகருர். (Lenin Selected works Eng Ed Mascow 1947 Volume II P 574)

ஒரு கட்சி மக்களோடு இயந்திரு... தென்ருல், மக்களின் எண்ணங்களை... உணர்ச்சிகளையும், குறிக்கோள்களை... பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கவே... மென்பது பொருள் சீர்திருத்தம் வி... கின்றனர். தங்கள் தாய் மொழி... வளர்ச்சியிலே ஊக்கம் காட்டுகின்ற... இவைகளை யெல்லாம் மதிக்கா... மாஸ்கோ மருத்துவம்தான் எல்... குறைகளையும் தீர்க்கும்; அது... மார்க்ஸ் சித்தாந்தம் என்று வர... கொள்கையை கடைப்பிடித்தால் எ... படி மக்களின் தொடர்பை அவர்க... பெற முடியும்! ஆகையால் தான் ... களின் உணர்ச்சிகளை மதிக்கும் ... இயக்கத்தின் சக்தி வளர்வது க... கம்யூனிஸ்ட்கள் நம்மீது பொரு... கொண்டு காய்கின்றனர். மக்களோ... தொடர்பு வைக்க அவர்கள் மக்க... உணர்ச்சியை மதிக்காவிடில் ... யூனிஸ்டு கட்சிக்கு ஆந்திர மக்கள் ... பித்த பாடத்தைத்தான் தமிழ் நா... லும் கற்பிக்கப்படும். இதே கருத்... தான் "கட்சி வேலையிலுள்ள கு... பாடுகள்" என்ற புத்தகத்தில் தோ... ஸ்டாலின் குறிப்பிடுகிருர். அவர் க... வதாவது: 'போல்ஸ்விக்குகள் ம... ளோடு தொடர்பு கொண்டுள்ளவ... பலம் வாய்ந்தவர்களாக இரு... அதற்கு மாருக மக்கள் தொட... அறுத்த அந்த நிமிடமே அவர்கள் ... கள் பலம் இழந்து பூஜ்யம் ஆகி... வார்கள்." (J. Stalin, Defects ... Party work).

இதனை இனியாவது தென்னு... கம்யூனிஸ்ட்டுகள் உணர்ந்து திரா... நாட்டுப் பிரிவினை கொள்கைக்கு... துரோகம் விளைவிக்காமல் இரு... தெளிவு பெறவேண்டுகிருேம்.

—ஞானம், பி. ஏ., ம...

கம்யூனிஸ்டுகளின் தலையில் ஆதித்தன் குட்டுகிறார்!

●

ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் நேரு சர்க்கார் தென்னாட்டுக்கு இழைத்து வரும் அநீதியையும் அதன் ஓரவஞ்சனையையும் தி.மு. கழகம், சென்ற திங்கள் இறுதியில் நாடெங்கும் விளக்கி, வடநாட்டு ஆதிக்கத்தின் போக்கினைக் கண்டிக்கவும் செய்தனர். தி.மு. கழகத்தின் முடிவு நேர்மையானது என்று நிரூபிக்கும் வகையில், தேசிய முகாமிலேயுள்ள பொறுப்புள்ள தலைவர்கள் சிலரும், சென்னை மாநில நிதி அமைச்சர் சுப்ரமண்யனும் பேசியுள்ளனர். இந்திய அரசியலாருக்கு வற்புறுத்தி புத்தியும் கூறியுள்ளனர். அதுமட்டுமல்லாமல், சுதேசமித்திரன் போன்ற தேசிய ஏடுகளும் சித்திரத்தின் மூலம் வடநாட்டு ஆதிக்கத்தின் போக்கினை விளக்கியிருக்கின்றன.

ஆனால் நம் நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கு மட்டும் தி. மு. கழகத்தின் முடிவு துவேஷமாகத் தெரிகிறதாம். எனவே வடநாட்டு முதலாளித்துவத்திற்குமண்டியிட்டுத் துதிபாடியும், அதே சமயத்தில் தி. மு. கழகத்தினர் மீது வசைமாரி பொழிந்தும் வருகின்றனர்.

இத்தகைய விபரீதப் போக்கிலே கடைபோடும் கம்யூனிஸ்டுகளுக்குத் தோழர் ஆதித்தன் அவர்கள் கூட தமது தினத்தந்தி 30-3-55-ன் வாயிலாக தலையில் குட்டி அறிவு புகட்டியிருக்கிறார்.

“காங்கிரஸ் ஆட்சியாளரின் ஐந்தாண்டுத் திட்டத்தை கண்டித்து திராவிட முன்னேற்ற கழகத்தினர் கூட்டங்கள் போட்டு தீர்மானங்களை நிறை வேற்றி இருக்கிறார்கள். மார்ச் 20ம் தேதியை “ஐந்தாண்டு திட்ட எதிர்ப்பு” நாளாக அவர்கள் கொண்டாடினார்கள்.

தி. மு. க. வினர் எதிர்ப்பு தெரிவித்ததற்கு போதிய காரணங்கள் உள்ளன. ஐந்தாண்டு திட்டம் தமிழ் நாட்டினருக்கு நியாயம் கொடுக்கவில்லை, என்ற கருத்து பரவலாக இருக்கிறது. இது டெல்லி சட்ட சபையிலும் எதிரொலித்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு புறக்கணிக்கப்படுவதாக கவலைப்படுவது வெறும் உணர்ச்சி வசமான கோஷமல்ல.

தற்போதைய நிலைமையில் சென்னை ராஜ்ஜியத்தில் தான் மிகக் குறைந்த வாழ்க்கைத்தரம் காணப்படுகிறது. இங்குதான் பிச்சைக்காரர்கள் அதிகம். இங்குதான் பஞ்சப்பேயின் பயமுறுத்தல் அதிகம்.

பருவ மழைக்காக ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து ஏமாந்து உயிர்விடுவது தமிழ் நாட்டு விவசாயியே! நிலையற்ற விவசாயமும், குறைந்த தொழில் வசதியும் உள்ளது தமிழ்நாடே!

இந்த நிலைமையில் மக்களின் வாழ்க்கைத்தரம் எப்படி உயரும் வேலை வசதி இல்லாத போது பிச்சைக்காரர்கள் தானே அதிகரிப்பார்கள்?

தமிழ் நாட்டில் விவசாயம் ஒரு ஸ்திரமான தொழிலாக இல்லாமல், பருவ மழையின் இஷ்டத்தைப் பொருத்து இருக்கிறது பருவ மழையை நம்பினால் என்ன ஆகும் என்பதை நன்றாகப் பார்த்து விட்டோம்.

ஆகவே தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலை நம்புவது குறைந்து, வேறு தொழில்கள் அதிகரிக்க வேண்டும். தொழில் சாலைகள் ஏற்பட வேண்டும். அப்போது தான் தமிழ் நாட்டுக்கு விமோசனம் ஏற்பட வழி உண்டு இந்த உண்மையை டெல்லி சர்க்காரிடம் இடித்துக் கூற காமராஜரும், தமிழ் நாட்டு எம். பி.க்களும் முன் வருவார்களா?”

தோழர். ஆதித்தன் அவர்களே கம்யூனிஸ்டுகளுக்கு புத்தி புகட்ட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதென்றால், தென்னாட்டின் வாழ்வைப் பற்றி கம்யூனிஸ்டுகளின் போக்கும் மட்டரகமான எண்ணமும் என்ன என்பது விளங்குகிறதல்லவா?

—நக்கீரன்

மண்டையோடு...தொடர்ச்சி

இங்கே—இலங்கைக்கு கொண்டு வந்தனர். நாடுமுழுதும் நான் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டேன். யானைகள் சூழ்ந்து வர மேள, தாளங்கள் ஒலிக்க, மேயர் மந்திரிகள், புத்த பிட்சுக்கள் ஆகியோர் உடன்வர எனது ஊர்வலம் நடைபெற்றது!

சுதந்திர ஆட்சியை நிறுவுவதற்காக, எந்தக் கண்டியிலிருந்து போராடினேனோ, அந்தக் கண்டியில் எனக்காக பெரியதோர் நினைவு மண்டபம் எழுப்பியுள்ளனர். மக்கள் தங்களது இறுதி மரியாதையை எனக்குத் தெரிவித்துக் கொள்வதற்காக நான் ஒரு சில மணிநேரம் இங்கு மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளேன், இன்று இன்னும்சற்று நேரத்தில் நான் இம்மண்டபத்தில் அடக்கம் செய்யப்படப் போகிறேன். அதற்குப் பின் என்னை இனி எவரும் இந்த “மண்டையோடு” உருவில் கூட காணமுடியாது!

மக்களின் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டுள்ள நான், இந்த இடை நேரத்தில் உலகத்திலுள்ள விடுதலை விரும்பிகளுக்கு எனது வாழ்க்கையைக் கூறிக் கொள்ள விரும்பினேன். விடுதலை விரும்பிகளே! வாழ்வின் இறுதிக் கோட்டிலே நின்று கொண்டு நான் உங்களுக்கு விடுக்கும்செய்தி ஒன்றே ஒன்றுதான்:—

“உரிமையுணர்ச்சியின் உந்துதலால் தூண்டப்பட்ட எழுச்சி எண்ணம் தான் விடுதலை வேட்கை! அந்த எண்ணம்—குறிக்கோள் —நிறை வேறினாலன்றி, வேறு எந்தத் தீயசக்தியைப் பிரயோகித்தும் அதனை அடக்க முடியாது! ஏனெனில், அடிக்க அடிக்க எழும் பந்தைப்போல அடக்குமுறை அதிகரிக்க, அதிகரிக்க அந்த விடுதலை எண்ணம் வேர்விடுமே தவிர, வீழ்ச்சியுறாது!”

செய்திகள்

பொத்தனூர் (சேலம்)

20—3—55 மாலை பொத்தனூரில் திராவிட முன்னேற்றக் கழக சார்பில் ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் இரா. செகநாதன் (தி. மு. க. பொதுக்குழு உறுப்பினர்) தலைமை வகித்தார், தோழர்கள் பேரம்பலம், இரா. சண்முகம் பி. ஏ., வி. ஏ. இராமநாதன், இலக்குமணன், வி.கே. ராஜு, இரா. முத்து ஆகியோர் பேசியபின் இறுதியாகப் பேசிய தோழர் டி. பி. மூர்த்தி அவர்கள் சென்னை அரசியலாரின் மதுவிலக்கு திட்டத்தினால் லட்சோபலட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்து வேதனையுடன் வாழ்கின்றார்கள், அதுபோன்றே சென்னையில் ட்ராம்வே கம்பெனியை மூடிவிட்டதன் விளைவாக பல்லாயிரக் கணக்கான பாட்டாளிகள் வேலையற்று ஊர்ஊராய் வேலை தேடித்திரிகின்றார்கள். அதுமட்டுமா! புகலூர்—வேலூர் சுற்றுவட்டாரத்தில் வெற்றிலை பயிர்த் தொழிலை நம்பி வாழ்ந்த மக்கள் வெற்றிலைக் கொடி காய்வதன் விளைவாக பொருள் இழந்து வேலையிழந்து வேற்றூர்களுக்குச் சென்று பிச்சை எடுத்துத் திரிகின்றார்கள். இவர்களுக்கெல்லாம் தமிழ்நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் சர்க்கரை ஆலைகளில் 75 சதவிகிதம் வேலையை ஒதுக்கித் தருவதற்கு சென்னை சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த நல்ல முயற்சியில் சர்வ கட்சியினரும் கட்சிபேதத்தை கடந்து நின்று சர்க்காரை வற்புறுத்த வேண்டும் என்று பேசி முடித்தார்.

வெள்ளவாவிப்புதூர்

24—3—55-ல் வெள்ளவாவிப்புதூரில் தி. மு க பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதசமயம் மேற்படியூர் நிலக்கிழார் பெருமாள்சாமி அவர்கள் தலைமைதாங்க மீனாட்சிபுரம் தோழர் எஸ். வி. சர்க்கரை சமுதாய சீர்திருத்தம் எப்படி பற்றி மிகத் தெளிவாக நீண்ட நேரம் பேசினார். தோழர் சர்க்கரை பேசிக்கொண்டு இருக்கும்போது அவர் அருகில் சிறு நாகப்பாம்பு ஒன்று வந்து அவரை பேசவிடாமல் தொல்லை கொடுத்தது. உடனே தோழர்கள் அதனை கொன்று விட்டார்கள். தோழர் சர்க்கரை கடவுள்களின் நிலையைப்பற்றி பேசும்போது பாம்பு வரவே கூட்டத்தினரை பார்த்து பாருங்கள் நான் ஆண்டவனுக்கு தேவைப்படாத நபராயிருந்தால் அதாவது கடவுளின் எதிரியாக இருந்தால அருகில் வந்த நாகம் என்னை கொத்தி யிருக்குமல்லவா. ஆகவே நாங்கள்தான் உண்மையில் ஆண்டவனின் நல்லபிள்ளைகள் என்று குறிப்பிடும்போது கூட்டத்தினர் பெருத்த மகிழ்ச்சியுடன் பலமாக கை தட்டினார்கள். பின் தோழர் வீரப்பன் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

பம்பாய் தோழர்கட்கு

“முயற்சி”

முகிழ்க்கும் புது முறுவல்
ஆண்டு மலராக அலருகிறது.

விரியும் நாள்: 17—4—55

கழக வங்கணர் தம் கவினுறு பொருட்கள் 10-4-55 வரை பணிமனையில் ஏற்கப்பெறும் தக்கார் தான் ஆள்க!

26, தோலங்காடி
பம்பாய் 17. வடவைக்குயில்
ஆசிரியர்: “முயற்சி” ப. தி மு, க.

பெங்களூரில் திருக்குறள் மாநாடு

●

பெங்களூர் டாஸ்கர் டவுன் கார்ப்பரேஷன் ஹைஸ்கூல் (பிளாக் பள்ளி) மைதானத்தில் மே மாதம் 14, 15 தேதிகளில் திருக்குறள் மாநாடு நடைபெற ஆவன செய்யப்பட்டு வருகிறது. மைசூர் மாநிலத்தில் திருக்குறளைப் பரப்ப வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இந்தத் திருக்குறள் மாநாடு நடைபெற இருக்கிறது. மாநாட்டில் திருக்குறள் பற்றிய ஆராய்ச்சிச்சொற்பொழிகளும் இசை, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியார் வள்ளுவர் காந்தியார் வில்லுப்பாட்டு என்ற கலை நிகழ்ச்சியைக் கொடுக்க இசைந்துள்ளார்கள்.

25-க்கு மேற்பட்ட தலை சிறந்த பேரறிஞர்களுக்குச் சொற்பொழிவாற்ற அழைப்பு அனுப்பப்பட்டுஇருக்கின்றது.

மாநாட்டுச் சார்பில் திருக்குறள் கண்காட்சி நடத்த முடிவு செய்துள்ளோம். அன்பர்கள் குறள்பற்றிய ஓவியங்களோ ஏட்டுச்சுவடிகளோ அனுப்பி வைத்தால் அதற்காகும் தபாற் செலவுகளை ஏற்றுக் கொண்டு பாது காப்பதாகத் திருப்பி அனுப்பப்பெறும். 15 000 மக்கள் பந்தலில் அமர்ந்து மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கவனிக்க வேண்டிய ஏற்பாடுகள்நடந்து வருகின்றன. திருக்குறளை யானை மீதேற்றி ஊர்வலம் வர ஏற்பாடாகியுள்ளது. மாணவர்களுக்கு மாநாட்டுச் சார்பில் திருக்குறள் சம்பந்தமான கட்டுரைப் போட்டிகளும் சொற்பொழிவுப் போட்டிகளும் நடை பெறும். மற்ற விவரங்களும் தேதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

மாநாட்டுக் கட்டணம் புரவலர் ரூ 25. வரவேற்பாளர் ரூ. 5. பிரதிநிதிரூ2. பார்வையாளர் ஆண்கள் ரூ 1. பெண்கள் அணா 8.

கடிதம் எழுதுவோர் செயலாளர் திருக்குறள் மாநாடு கார்ப்பரேஷன் ஹைஸ்கூல், டாஸ்கர் டவுன் பெங்களூர்-1. என்ற விலாசத்திற்கு எழுதி விபரம் அறிய வேண்டுகிறோம்.

மேலப்பாளையம்

பசார் மைதானத்தில் 20—3—55 இரவு 8 மணிக்கு ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் நா. சங்கரலிங்கம் தலைமையில் இந்திய சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்தில் திராவிடத்திற்கு செய்திருக்கும் ஓரவஞ்சனைப் பற்றியும் திராவிடம் பிரியவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியும் பலர் பேசினர். கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அலங்காநல்லூர்

20-3-55-ம் நாள் காலை 10 மணிக்கு அலங்காநல்லூர் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் துணைச்செயலாளர் தோழர் சின்னசாமி அவர்கள் தலைமையில் கூடியது அதுபோது ஐந்தாண்டு திட்டத்தினால் வடநாடு வாழ்கிறது. தென்னாடு தேய்கிறது என்பதுபற்றி தோழர்கள் கிருட்டிணன், இளங்கோ, அன்பரசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கைத்தறித் துணியையே ஆதரியுங்கள்

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

10

கடவுள் மதம்.

கடவுள், மதம் இவைகள் பல நாடுகளை எண்ணற்ற துன்பங்களுக்கு ஆளாக்கி இருக்கின்றன. உலகத்து மக்கள் மண்ணில் சிந்திய இரத்தங்களில், பெரும்பகுதி கடவுள் மதம் காரணமாகவே சிந்தப்பட்டிருக்கின்றன. ஒரு அரசாங்கமும், இன்னொரு அரசாங்கமும் போரிட்டு உயிர் குடித்திருப்பதைவிட, கடவுளும் மதமும் ஏராளமான உயிர்களைக் குடித்திருக்கின்றன. நவகாளிப் படுகொலைக்கு அரசியல் காரணங்களைவிட கடவுள் மதம் இவற்றின் காரணமே அதிகம்!

வட இந்தியர்களுக்கும், தென்னிந்தியர்களுக்கும், மதத்தைப் பொறுத்த மட்டில் 'முரண்பாடு' அதிகமில்லை — என்றாலும், வட இந்தியாவில், மதம் வெறியாகவும்—மடமையாகவும் வளர்ந்தோங்கி யிருக்கிறது.

திராவிடர்களுக்குச் சொந்தமான அபின் போன்ற மதம் ஒன்றும் கிடையாது. திராவிட நாட்டில், திராவிடர்களால் கைக்கொள்ளப் பட்டிருக்கும் இந்து, முஸ்லீம், கிறிஸ்து முதலான அத்தனை மதங்களும் பிற நாட்டாரிடம் வாங்கிய இரவல் மதங்களே!

இந்த இரவல் மதங்கள் அத்தனையிலும் பெரிதாக வளர்ந்திருக்கின்ற இந்து மதமும், அதன் கோட்பாடுகளும் ஒரு மதத்தன்மை வாய்ந்ததே அல்ல! அது ஒரு வகுப்பாரின் முன்னேற்றத்திற்காக மடமைமிக்க காலத்தில் திணிக்கப்பட்ட ஒரு சாதீயத் தத்துவமேயாகும். இந்து மதத்தை, பிற மதங்களோடு ஒப்பிட்டு அலசி ஆராய்ந்தால், அதில் —திரும்பத் திரும்பக் கிடைப்பது சாதீயத் தத்துவம்தான்—மதத் தத்துவம் அல்ல.

மதம் என்பது கடவுளைப் பற்றிய கொள்கை என்று பொருள்படும். இந்துமதக் கடவுட் கொள்கைகளை ஆராய்ந்தால் வெங்காயத்தை உரித்து நடுத்தண்டு காண்பதாகவே முடியும்.

இந்துமதம் என்கிற வெங்காயத்தில் கடவுள் என்கிற நடுத்தண்டைத் தேடி உரிக்க ஆரம்பித்தால், உரிக்கிற தோலெல்லாம் சாதீயத் தத்துவம் என்கிற தோலாகி கடைசியில் ஒன்றும் இல்லாமலே போய் விடும். 'கடவுளாவது வெங்காயமாவது' என்று அலட்சியமாகக் கூறப்படுகிற பழமொழி ஆழ்ந்த பொருள் பொதிந்ததாகும்.

இந்துமதத்தின் மூலவேதங்களான ரிக், எசுர், அதர்வணம், சாமம், என்னும் நான்கு வேதங்களும் ஒரு கூட்டத்தாரின் நித்திய சடங்கு முறைகளையும், காட்டுமிராண்டித் தனமான வேத வேள்விகளையும் கூறுவனவாகும். அதைத் தொடர்ந்து உண்டான உபநிஷத்துக்கள், பிறமதங்களின் தத்துவங்களை ஏற்றுக்கொண்டு, பழைய காட்டுமிராண்டி வேதங்களுக்கு மெருகுபோட முயற்சித்து, இரண்டுங்கெட்டான் நிலையில் கிடக்கும் சுவீகார தத்துவங்களாகும்.

சாதாரண மக்களிடம் பிரபலமடைந்திருக்கும் புராண இதிகாசங்களுக்கும், பழைய வேத உபநிஷத்துக்களுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது.

துவைதம், அத்துவைதம், விசிட்டாத்துவைதம் என்கிற பிற்கால தத்துவங்கள் பழைய வேத உபநிஷத புராண இதிகாசங்களோடு எள்ளளவும் சம்பந்தம் உடையவை அல்ல. உலகாயுதம், நிரீச்சுரவாதம் என்னும் கொள்கைகள் வலுப்பட்ட காலத்தில், அதற்கு பிரமஞானம் என்கிற பெயரிட்டு அதனையும் இந்துமதம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்துமதம் ஆதிநாள் தொட்டு இன்றுவரை அதனுடைய சாதீய தத்துவத்தை மாத்திரம் இயன்ற அளவு காப்பாற்றிக் கொண்டு கடவுளைப்பற்றி கவலை யில்லாமல் 'எப்படிச் சொன்னாலும் ஒன்றுதான்' என்று இருந்து வருகிறது.

இந்துமதத்தின் சிறப்புக் குறித்துப் பேசுவோரிடம் இதைப்பற்றி விளக்கம்கேட்டால் 'வெட்டொன்று துண்டிரண்டு' என்பதுபோல் கூறாமல் 'விவகாரத்தைக்குவித்து விஷயத்தைப் புதை' என்கிற சமுக்கார் வாதம்கூறுகிறார்கள். அத்தகையோர் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றை ஆராய்ந்தால் கடவுள் மதம் இவைகளை பிழைப்புக்குத்தக்க தொழிலாக்கிக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மதம் கொடுத்திருக்கிற நல்வாழ்வு நாட்டின் நலனுக்கும், அறிவுக்கும், விரோதமான முறையில் இருப்பதால், இந்துமதத்தைச் சேர்ந்த நேர்மையான அரசியல்வாதி எவனும் இந்த சாதீயத் தத்துவத்தை 'மதம்' என்று கட்டியழும் மடமையைக் கண்டிக்காமல் இருப்பதில்லை—இருக்க முடியாது. இந்தியாவில் தோன்றிய அரசியல்வாதிகளில் இந்துமதக் கொள்கைகளை குறைந்த அளவிலாவது கண்டிக்காதவன் ஒருவன் கூட இல்லை.

அவ்வளவு கண்டனத்திற்குரிய மதம் வடவர்களிடையே மடமையை உரமாக்கி, வெறி வேகத்தில் வளர்ந்திருக்கிறது.

தற்போது வடஇந்தியாவில் நடந்து வரும் 'பசுவதைத் தடுப்பியக்கம்' இந்த வெறிச்செயலின் ஒரு பகுதியேயாகும்.

படித்தவன், நாகரீகம் உள்ளவன் என்று கருதத் தக்கவனுங்கூட, தெருக்களில் வரும் பசுமாடுகள் சிறுநீர் கழிப்பதைக் கண்டால், அதனை இரு கையாலும் ஏந்தி முகத்திலும், தலையிலும், தடவிக் கொள்வதோடு வாயிலும் ஊற்றிக் குடிக்கிறான். இந்தச் செயல் அங்கு புனிதமாகவும் புண்ணியமாகவும் கருதப்படுகிறது.

தென்னிந்தியாவில் இப்படி மூத்திரங் குடிக்கும் நாகரிகமுள்ளவர்களைக் காண முடியாது!

சில ஆண்டுகளுக்கு முன்பு நானும், தோழர் ஈ. வெ. கி. சம்பத்தும் கழகக் கூட்டத்திற்காகத் தனுஷ்கோடிக்குப் போனோம். அங்கிருந்து திரும்பும்போது ஒரே இரயில் வண்டியில் இண்டர் வகுப்பில் வந்தோம், இரயில் பாம்பன் பாலத்தில் வரும்போது, நாங்கள் இருந்த பெட்டிக்கு அடுத்த பெட்டியில் வந்து கொண்டிருந்த வட இந்தியர்கள், காலணா முதல் நாலணா வரையுள்ள காசுகளை பைகளில் வைத்துக் கொண்டு அள்ளி அள்ளி பாம்பன் கால்வாயில் (கடலில்) எறிந்து கொண்டிருந்தார்கள். தோழர் சம்பத்துக்கு இது தெரியாது. அவர் எதையோ படித்துக்கொண்டிருந்தார். நான் இதுபோன்ற செயலை இதற்குமுன் பாராதவன்; ஆகையால் மிகவும் ஆச்சரியப் பட்டேன். பாம்பன் பாலத்தில் இரயில் மெதுவாக ஓடுவது வழக்கம். எனவே, கரையை அடைய 5 நிமிடங்களுக்கு மேலாகும். அவ்வளவு நேரமும் நூற்றுக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சில்லறைகளை அந்த வட இந்தியப் பைத்தியக்காரக் கும்பல் கடலில் எறிந்து கொண்டே இருந்தது. கடைசியில் தோழர் சம்பத்தைக் கூப்பிட்டு நடந்ததைச் சொன்னேன், அவர் சொன்னார்:—

எம். எஸ். ஆர்., இதுதான் மதம் பிடித்தவனுக்குக் கடவுள் கொடுத்திருக்கும் ஞானம்! பக்கத்துவீட்டுக்காரன் 10நாள் பட்டினி என்றாலும் செப்புக் காசு தரமாட்டான்! இங்கே வந்து கடலில் கொட்டுகிறு[ன்] பாருங்களேன்!

என்று அங்கலாய்த்துவிட்டு படிக்க தொடங்கினார். இதுபோலவே வட இந்திய இந்துக் கோவில்களில் சாமி தரிசனம் செய்ய வருகிறவர்கள் பூசாரிக்கு முன்னால் காசுகளை எறிந்துவிட்டுப் போவதைக் கண்ணார கண்டேன்.

தென்னிந்தியாவில் ஆண்டவனுக்கு காசு கொடுக்க விரும்பும் பக்தர்கள் இருந்தாலும், அதற்கென இருக்கும் உண்டிப் பெட்டியில் போடுவார்களே தவிர இப்படி பூசாரி முன்னால் எறிவது வழக்கமில்லை.

வட இந்தியாவில் துறவிகள், சாதுக்கள் ஆகியவர்களுக்கு அளவுக்கு மீறிய மரியாதை காட்டப்படுகிறது. சாதாரணமாக ஒரு சோம்பேறிப் பயல் 'சாது' என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு ஊரை மிரட்டுவான். அவன் கேட்ட அளவு பணம் தரவேண்டும். இல்லையானால் வீடோ கடையோ எதுவானாலும் சரி, அதன் முன்னால் உட்கார்ந்து 'சண்டித்தனம்' செய்வான்! அங்குள்ள பொதுமக்கள் பெரும்பாலும் சாதுவுக்குத்தான் பரிந்து பேசுவார்களேயன்றி நீதியா, அநீதியா என்று கவனிக்கமாட்டாகள்!

கடந்த 1951-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் திரு. நேருவை எதிர்த்து ஒரு சாமியார் போட்டியிட்டதும், அவனுக்கு சுமார் 12000 ஓட்டுகள் கிடைத்து ஜாமீன் தொகை பறிபோகாமல் இருந்ததும் வட இந்திய மதப்பைத்தியத்தின் எடுத்துக் காட்டாகும். இன்றும் பாராளுமன்ற உறுப்பினர்களாக (M. P. க்கள்)த் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு சாமியார்கள் பதவி வகிக்கிறார்கள்! வட இந்தியாவின் மதப் பைத்தியம் எவ்வளவு உச்ச நிலையில் இருக்கிறது என்பதற்கு இதைவிட சான்று தேவையா? [...]யேனும், அரிய செங்காயேனும், உதிர்[...] கந்தமூலங்களேனும் கனல் வாதை வ[...]தின் அள்ளிப் புசித்தபின் கண்மூடி மௌனியாகி, தனியே இருந்து சச்சிதான[ந்தம்] பெறவேண்டிய சாமியார்கள் தரணிய[...] வந்திருக்கிறார்கள் என்றால் அங்கு பொது மக்கள் நெஞ்சத்தில் 'மதம்' இமயமலையே வளர்ந்து மடமை வயிரங் கொண்டிருக்கிறது என்பதைத் தவிர என்ன கூறமுடியும்.

இதைவிட நல்ல உதாரணம் வேண்டுமானால், தற்காலக் குடியரசுத் தலைவர் திரு இராசேந்திர பிரசாத்தை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. இராசேந்திரப் பிரசாத் பீ[கார்] மாகாணத்தைச் சேர்ந்தவர். நல்ல ப[டிப்]பாளி. ஆராய்ச்சியுள்ளவர். தற்போது இந்தியாவின் மிகப்பெரும் பதவியான குடியரசுத் தலைவர் பதவியில் இருப்பவர். அவருடைய பேட்டிக்காக அயல்நாட்டார் பலர் காத்துக் கிடப்பர். அவருடைய பேச்சையும், செயலையும் உலகமே உற்று நோக்கிக் கொண்டிருக்கும். அத்தகையவர் சமீப காலத்திற்கு முன் காசிக்குப் போனார். அங்குள்ள 200 பார்ப்பனர்களின் கால்களைக் கழுவிப் பூசை செய்து அந்தக் கால் கழுவிய நீரைப் பிடித்து '[...]தம்' என்று தலையில் தெளித்துக் கொண்டு திரும்பினார். அதுமட்டுமா?

டில்லி அரசாங்க மாளிகைக்குள், முன்பிருந்த வெள்ளைக்கார வைஸ்ராய்களின் சௌகரியத்திற்காகக் கட்டப்பட்ட கிறிஸ்தவக் கோவில் ஒன்று இருக்கிறதாம். [அப்]போது கிறிஸ்தவர்கள் ஆட்சிபோய் இந்துக்கள் ஆட்சி நடக்கிறதல்லவா? பரம வை[...]

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிடப்பித்தன்

9

பண்டைக்கால ஆசிரியர்கள் தம் மாணுக்கர்களுக்கு எப்படி எப்படியெல்லாம் கல்வி புகட்டினுர்கள் என்ற விவரங்களை தெரிந்து கொள்வதற்கான வரலாறுகள் இலக்கியங்களில் கிடைப்பது அரிதாகவே உள்ளன. பவணந்தியார் இயற்றியுள்ள நன்னூல் இலக்கணத்தின்கண் கற்பிக்கும் ஆசிரியர் தன்மையும் நூல் கற்பித்தலின் தன்மையும் கூறப்பட்டுள்ளவனின் றும்பண்டைகால ஆசிரியர்களைப்பற்றியும் அவ்வாசிரியர்கள் நூல் கற்பித்த முறைகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

"குலனருடெய்வங் கொள்கைமேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சி
[யும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே"

(நன்னூல்—பொதுப்பாயிரம்—26)

என ஆசிரியது வரலாறு கூறப்பட்டிருப்பதும்.

ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னேக்கிச்
சிறந்துழி யிருந்துதன் றெய்வம்
[வாழ்த்தி
உரைக்கப் படும்பொ ருள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முக
]மலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ
[னுளங்கொளக்
கோட்டமின் மனத்தினூல் கொடுத்த
[லென்ப"

(நன்—பொதுப்பா—36)

என ஆசிரியர் நூல் கற்பித்தலின் வரலாறுகூறப்பட்டிருப்பதும் அக்காலத்து கல்வி கற்பிக்கும் ஆசிரியர் பற்றியும் அவர் கல்வி கற்பிக்கும் முறைபற்றியும் தெரிந்து கொள்ளலாம், பவணந்தி காலத்து முறையே அவர் காலத்திற்கு மூற்பட்ட காலங்களிலும் நிலவியிருந்ததெனலாம்,

இது நல்லாசிரியரிலக்கணம் கூறுவதாகும். குலனும் அருளும் கடவுள் வழிபாடும் மேம்பாடும் நூல்களிலே பழகிய தெளிவும் தொடுத்துச் சொல்லுகின்ற உரை வலிமையும் நிலத்தையும்—மலையையும்— துலாக்கோலையும்— மலரையும் நிகர்க்கின்ற மாட்சியும், உலக நடையை அறியும் அறிவும், உயர்வாகிய குணங்களும் இவைபோல்வன பிறவும் நிறைந்திருப்பவன் நூல் கற்பிக்கும் ஆசிரியனுவான் என்பது பொருள்.

நிலத்தை நிகர்க்கின்ற மாட்சியுடைய ஆசிரியன் என்று மேலே கூறப்பட்ட பவணந்தி விளக்குவது அறியத்தக்கது.

"தெரிவரும் பெருமையுந் திண்மை
[யும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பாகும்மே"

(பொதுப்பாயிரம்-27)

இதன் பொருளாவது: பிறராலறியப்படாத உருவத்தின் பெருமையும், பெரிய பாரஞ்செய்துதன்மேலே நெருங்கினவைகளாற் கலங்காத வலிமையும் தன்னை யடுத்த மனிதர் தோண்டுதலாகிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கின்ற பொறையும், பருவத்திலே உழவர் செய்கிற முயற்சி யளவிற்குத்தக அவர்க்குப் பயனைத் தருதலும் நல்ல நிலத்தினிடத்து பொருந்திய குணங்களாகும் இதன் கருத்தாவது: பிறராலறியப்படாத கல்வியறிவின் பெருமையும் பெரிய வாதஞ்செய்து தன்மேலே நெருங்கினவராற் கலங்காத வலிமையும் தன்னையடுத்த மாணுக்கர் இகழ்தலாதியாகிய குற்றங்களைச் செய்யினும் பொறுக்கின்ற பொறுமையும், பருவத்திலே மாணுக்கர் செய்கிற முயற்சி யளவிற்குத்தக அவர்க்குப் பயனைத் தருதலும் ஆகியவை ஆசிரியனிடத்துப் பொருந்திய குணங்கள்; ஆதலால் நிலம் அவனுக்கு உபமானமாயிற்று.

மலையை நிகர்க்கின்ற மாட்சியுடைய ஆசிரியன் என்று கூறப்பட்டதற்கு விளக்கமாக,

"அளக்க லாகா வளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு
[மலைக்கே"

(பொதுப்பாயிரம்—28)

பவணந்தி ஆசிரியர் கூறுவதும் தெரிய வேண்டியதாகும். பொருளாவது அளவு செய்யப்படாத பலவகைப் பொருளும், எப்படிப்பட்ட வலிமையுடையவராலும் அசைக்கப்படாத உருவத்தினிலையும், நெடுந்தூரத்திலுள்ளவராலுங் காணப்படும் உயர்ச்சியும், மழை பெய்யாமல் வறண்ட காலத்திலுந் தன்னைச் சேர்ந்த உயிர்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கிற கொடையும் மலைக்குள்ள குணங்களாகும். இதன் கருத்தாவது: அளவு செய்யப்படாத தன் கல்வியினளவும், அளவு செய்யப்படாத பலவகை நூற்பொருளும், ஏற்பட்ட புலமையை யுடையோராலும் அசைக்கப்படாத கல்வியறிவினிலையும், நெடுந்தூரத்திலுள்ளவராலும் அறியப்படுகிற உயர்ச்சியும், பொருள் வருவழி வறண்ட காலத்திலும் தன்னைச் சேர்ந்த மாணுக்கர்களுக்குக் கல்விப் பொருளைக் கொடுக்கின்ற கொடையும், ஆசிரியருக்குள்ள குணங்களாதலால் மலை அவனுக்கு உபமானமாயிற்று.

துலாக்கோலை நிகர்க்கின்ற மாட்சியுடைய ஆசிரியன் என்று கூறப்பட்டதை விளக்கும் மூகத்தான்,

"ஐயந்திரப் பொயுலை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையுமிகுநிறை கோற்கே"
[பொதுப்பாயிரம்—29]

எனக் கூறுகின்றுர் நன்னூலாசிரியர். இதன் பொருளாவது: சந்தேகம் நீரநிறுக்கப்பட்ட பண்டத்தினளவைக் காட்டலும், உண்மை பெறத்தான் இரண்டு தட்டுகளுக்கும் நடுவே நிற்கையும் தராசுக் கோலின்கண் குணங்களாக மிகும். கருத்து: சந்தேகம் நீரவினுவப்பட்ட சொற் பொருளினியலைக்காட்டலும், புலவரிருவா மாறுபட்டாராயின் உண்மை பெறத்தான் அவ்விருவர்க்கும் நடுவாக நிற்கையும் ஆசிரியனின் குணங்களாகமிகும். ஆதலால் நிறைகோல் அவனுக்கு உபமானமாயிற்று.

இனி பூவைநிகர்க்கின்ற மாட்சியுடைய ஆசிரியன் எனக் கூறப்பட்டதை,

"மங்கல மாகி யின்றி யமையாது
யாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் உடையது பூவே"

(பொதுப்பாயிரம்-30)

என விளக்கும் இச்சூத்திரத்தின் பொருளாவது: மங்கல காரியம் யாவற்றிற்கும் இன்றியமையாததாக, கண்டோர் யாருங் களித்து மேலாகத் தன்னை சூடிக்கொள்ள, மெல்லிய குணமுடையதாகி மலர்தர்க்குரிய காலத்திலே முகவிரிதலையுடையது பூவாகும். கருத்து: மங்கலக் காரியத்திற்குரியனுகி யாதொரு காரியத்திற்கும் இன்றியமையாதானுகி, கண்டோர் யாவருங் களித்து மேலாகத் தன்னை வைத்துக்கொள்ள மெல்லிய குணமுடையவனுகிப் பாடஞ் சொல்லுதற்குரிய காலத்திலே முகமலர்தலையுடையவன் ஆசிரியனுதலால் பூ அவனுக்கு உபமானமாயிற்று.

இப்படி யெல்லாம் நல்லாசிரியன் இலக்கணம் கூறிய பவணந்தியார் ஆசிரியராகாதவரின் இலக்கத்தை கூறுவதும் நோக்கத்தக்கதாகும்.

'மொழிகுண மின்மையு மிழிகுண
[வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலுங்
கழற்குட மடற்பனை பருத்தி குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள்
[சிந்தையு
முடையோ ரிலரா சிரியரா குதலே"

(பொதுப்பாயிரம்-31)

எனக் கூறுவதின் பொருளாவது: பாடஞ் சொல்லுங் குணமில்லாமையும் இழிகுணமாகிய சுபாவத்தையும் பிறருக்கு வருங் கல்வியைக் குறித்துக் கொள்ளும் பொறுமையும், பொருளின் மேல் அதிகமாக வைக்குமாசையையும், மெய்ப் பொருளை மறைத்து பொய்ப் பொருளைக் காட்டி வஞ்சித்தலையும், கேட்போருக்கு அச்சமுண்டாக்கப் பேசுதலையும், கழற்குடமும்— மடற்பனையும் — பருத்திக் குண்டிகையும் — முடத்தெங்கும் ஆகியநான்கையும் ஒப்பென்று சொல்ல மாறுபாடு கொண்ட கருத்தையும் தம்மிடத்திலுடையவர் கற்பிக்கும் ஆசிரியராகுதல் இலராவர்" என்பதாகும்.

மேலே கழற்குடத்திற்கு ஒப்பிட்டுக் கூறப்படுவதாவது,

"பெய்த முறையன்றிப் பிறழ
[வுடன்றருஞ்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே"
[பொதுப்பாயிரம்—32]

இதன் பொருள்: தன்னுள்ளே போட்ட முறையினுவல்லாமல், முன் போடப்பட்டவையும் பின் போடப்பட்டவையும் அம்முறை பிறழ்ந்து போக, விரைவிலே தன்னுள்ளே கொண்ட கழற்காய்களைக் கொடுக்கின்ற செய்கையானது, கழற்காய் போடப்பட்ட குடத்தினது குற்றமாம். கருத்து: தமக்குக்கற்பித்த முறையினுல் அல்லாமல் முன் கற்பிக்கப்பட்டவையும், பின் கற்பிக்கப்பட்டவையும், அம்முறை பிறழ்ந்து போக, விரைவிலே தம்முள்ளே கொண்ட நூற்பொருள்களைத்தருகின்ற செய்கையானது ஆசிரியராகாதவரது குற்றமாதலால் கழற்குடம் அவருக்கு உபமானமாயிற்று.

மடற்பனைக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருப்பதாவது:

"தானே தரக்கொளி னன்றித் தன்பால்
மேவிக் கொள்ளக்கொடா விடத்தது
[மடற்பனை'
[பொதுப்பாயிரம் 33'

பொருள்: தானே தன்னிடத்திலுள்ள பழங்களைத்தர கொண்டாற் கொள்ளலாமே யல்லாமல், ஒருவர் தன்னிடத்து நெருங்கி வந்து பறித்துக் கொள்ள அப் பழங்களைக் கொடாத விடத்தையுடையது தன் வடிவமுழுதுமடல் விரிந்த பனை. கருத்தாவது: தாமே தம்மிடத்திலுள்ள நூற்பொருளைச் சொல்ல அறிந்து கொண்டாற் கொள்ளலாமே யல்லாமல், ஒருவர் தம்மிடத்து நெருங்கி வந்து வினுவி அறிந்து கொள்ள அந் நூற் பொருள்களைச் சொல்லாத விடத்தையுடையவர் ஆசிரியராகாத வராதலால் மடற்பனை அவருக்கு உபமானமாயிற்று.

பருத்திக் குண்டிகைக்கு ஒப்பிட்டுக் கூறப்படுவதாவது,

"அரிதின் பெயக்கொண் டப்பொரு
[டான்பிறர்க்கு
எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை"

(பொதுப்—34)

இதன் பொருள்: பஞ்சினைக் கொண்டபோதும் வருத்தத்தோடு சிறிது சிறிதாக அடைப்பதன்னுள்ளே கொண்டு கொடுக்கும்போதும் அப்பஞ்சை தான் பிறர்க்கு எளிதிற் கொடாத குற்றமுடையது பஞ்சுபோட்ட குடுக்கையாகும். கருத்து; கல்வியை கற்றபோதும் வருத்தத்தோடு சிறிது சிறிதாகக் கற்பிக்கத் தம்முள்ளே கொண்டு பாடஞ் சொல்லும்போதும், அக்கல்வியை தாம் பிறர்க்கு எளிதிற்கொடாத குற்றமுடையவர் ஆசிரியராகாதவராதலால் பருத்திக் குண்டிகை அவர்க்கு உபமானமாயிற்று.

"முடத்தெங்கிற்கு ஒப்பிடப்பட்டதா
[வது
பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்
கே"

(பொதுப்—35)

இதன் பொருள்: நீர்விடுகை முதலாகியயுபகாரங்களையுஞ்செய்து தனக்கு வழி-பாடு செய்யுங் குணத்தினின்றும் அல்லாத பிறர்க்கு தன்னிடத்திலுள்ள காய்களை தருங் குற்றமுடையது வேலிக்கப்புறம் வளைந்த தென்னைமரம். கருத்து: பொருள் கொடுத்தல் முதலாகிய பலவித யுபகாரங்களையும் செய்து தமக்கு வழிபாடு செய்யும் குணத்தினின்றும் அல்லாத மாணுக்கருக்குத் தம்மிடத்திலுள்ள கல்விப் பொருளைத் தருங் குற்றமுடைய வாசிரியராகாதவராதலால் முடத்தெங்கு அவருக்கு உபமானமாயிற்று.

(தொடரும்)

இந்துவான திரு. இராசேந்திரர், சுவாமி தரிசனம் செய்வதற்காக அரசாங்க மாளிகைக்கு வெளியில் போய் வரலாமா? எனவே, மாளிகைக்குள் ஒரு இந்துக்கோவில் கட்ட வேண்டும் என்று தீர்மானித்தார்.

கோவில் கட்டுவதற்காகப் பெருஞ்செலவில் மதிப்பீடுகள் தயாராயிற்று. பாராளுமன்றின் ஒப்பளிப்புப் பெறுவதற்காக முதன் மந்திரி திரு. நேருவின் பார்வைக்கு மதிப்பீடுகள் அனுப்பப்பட்டன. பார்த்தார் பண்டித நேரு; 'இது, வெள்ளைக்காரன் சர்க்கார் போன்றது அல்ல—அது மக்கள் பணத்தை கோவில் கட்டியும், குளம் வெட்டியும் செலவு செய்தது என்பதற்காக நாமும், அப்படிச் செய்து கொண்டிருக்க முடியாது. "தலைவருக்கு சுவாமி தரிசனம் செய்ய வேண்டும் என்கிற பக்தியும் ஆசையும் இருந்தால், அவர் வசிக்கும் மாளிகையிலேயே அவருக்கு விருப்பமான ஒரு இடத்தில், சுவரில் பலமான ஆணி ஒன்றை அடித்து, எந்தக் கடவுள் வேண்டுமோ அந்தக் கடவுளின் படம் ஒன்றைப் பெரியதாகப் பார்த்து வாங்கித் தொங்கவிட்டுக் கொண்டு போகிற வருகிற நேரமெல்லாம் தரிசனம் செய்து கொண்டிருக்கலாம்! இதற்காக, இவ்வளவு பணம் செலவு செய்யத் தேவை இல்லை!" என்று கூறியதோடு மதிப்பீடுகளையும் திருப்பி அனுப்பி விட்டார்.

பண்டித நேரு சில சமயங்களில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளும் வழக்கப்படி இந்தக் கட்டத்தில் எப்படியோ புத்திசாலியாக நடந்திருக்கிறுர். இப்படிப்பட்டவர்தான் கும்பமேளாவுக்கும் போயிருக்கிறுர். விசித்திரமான மனிதர்! இவருடைய குணுதிசயங்களை பின்பு விவரிக்கும் இடங்களில் ஆராய வேண்டுகிறேம். (தொடரும்)

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் பொதுச்சபைக் கூட்ட முடிவுகள்

3—4—55ந் தேதி காலை 7 மணிக்கு கோவை புகை வண்டி நிலையத்தில் தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கும், கரூர் பெ. வீரண்ணன், திருப்பூர் சு. துரைசாமி, உடுமலை வெங்கிடு சாமி, கணேஷ், கிருஷ்ணன் ஆகியோர்களுக்கும் கோவைதிராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சார்பாக ஒரு வரவேற்பு அளிக்கப் பட்டது.

பொதுச் சபைக் கூட்டம்

காலை 10 மணிக்கு கோவை தியாகராயர் படிப்பகத்தில் அமைப்பாளர் இரா. சுந்தரம் அவர்கள் தலைமையில், தோழர்கள் என்: வி. நடராசன், நகர தி. மு. க. செயலாளர் எஸ்: எ: இராசமாணிக்கம், வழக்கறிஞர் கஸ்தூரி பி.எ,பி.எல், ஆகியோர் முன்னிலையில் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் பொதுச் சபைக் கூட்டம் நடைபெற்றது. நீண்ட நேர விவாதத்திற்குப்பின் "திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழகம்" என்ற பெயரின் அமைப்பு முறையில் ஒருதொழிற் சங்க இயக்கத்தை ஏற்படுத்தி நடத்துவதென முடிவு செய்யப் பட்டது. மேலும் இரண்டொரு முக்கிய தீர்மானங்கள் செய்யப் பட்டு இறுதியில், தொழிற்சங்கத் திற்கான கொள்கைகள்—சட்ட திட்டங்கள் உருவாக்க கீழ்கண்ட தற்காலிக செயற்குழுவை நியமிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர்கள் :

தோழர்கள் கோவை இரா. சுந்தரம், ஒண்டிப்புதூர் அய்யாசாமி, உடுமலை ப. நாராயணன், கரூர் பெ. வீரண்ணன், திருப்பூர் சு. துரைசாமி, பொள்ளாச்சி அ. ச. பாலு, சிங்காநல்லூர் எஸ். பி. இராசு, மாச்சாம்பாளையம் நா. கிருஷ்ணன், கோவை மாரிமுத்து, ஆகியோரை நியமிப்பது என்றும் இந்த செயற்குழுவிற்கு கன்வீனராக தோழர் இரா. சுந்தரம் அவர்களையும், ஆலோசகர்களாக தோழர்கள் என். வி. நடராசன், கஸ்தூரி பி.ஏ, பி.எல், ஆகியோரை நியமிப்பதெனவும் பொதுச்சபைக் கூட்டம் ஏகமனதாக முடிவு செய்தது.

ஊழியர் கூட்டமும் பொதுக் கூட்டமும்

மாலை 5-மணிக்கு கோவை, சிங்காநல்லூர், சூலூர், ஒண்டிப் புதூர் ஆகிய ஊழியர் கூட்டம் ஒன்று சிங்காநல்லூரில் நடைபெற்றது. அமைப்பாளர் இரா. சுந்தரம், என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்

மாலை 6-மணிக்கு என். ஜி. ஆர். மைதானத்தில் தோழர் சி. இராசு தலைமையில் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சார்பாக மாபெரும்பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர்கள் சு. துரைசாமி, அர்த்தநாரி, வெங்கிடுசாமி, இரா. சுந்தரம், எஸ். ஏ. இராசமாணிக்கம், கஸ்தூரி பி-ஏ,பி-எல், ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தியபின் தோழர் என், வி, நடராசன் தொழிற் சங்கத் துறையில் திராவிடர் இயக்கம் ஈடுபடுவதேன் என்பது குறித்து நீண்டதோர் விளக்க உரை நிகழ்த்தினார் அமைப்பாளர் நன்றிகூறகூட்டம் இனிது முடிவுற்றது

அமைச்சர் சுப்ரமண்யனாரே—தொடர்ச்சி

முடியும் என்பதாகவும் கூறியிருக்கிறார். இவ்வாறு நான் கூறுவதில் உண்மை யில்லையென்று எண்ணுவீர்களானால் ஆச்சாரியார் அவர்களையே கேட்டுப் பார்த்துத் தெளிவு பெறுங்கள்.

அடுத்தபடியாக உலகமே ஒன்றுசேர வேண்டும் என்று பேசப்படும் இந்நாளில் நாட்டுப் பிரிவினை கோரலாமாஎன பெரிய கேள்வி யொன்றும் கேட்டிருக்கிறீர்கள். அவ்விதமானால் உலக மனைத்தும் ஒரே சர்க்காரின் கீழ் இயங்குவதுதான் எங்கள் கொள்கையென உங்கள் மேலிடத்தார் அறிக்கை விடச் செய்வீர்களா? பிறகு நாட்டுப் பிரிவினை பற்றிய பேச்சு இருந்தால் கேளுங்கள்! ஆனால் சுரண்டல்காரர்களின் ஆதிக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இனத்தினர்—நாட்டினர் தங்களின் உரிமையை நிலைநாட்ட முயற்சிக்கும்போது, ஏகாதிபத்தியக் கும்பல் எந்த வேதாந்தம் பேசுமோ அந்த வரட்டு வேதாந்தத்தைத் தாங்களும் கூறுவது நேர்மையாகுமா?

சுப்ரமண்யனாரே, தமிழ்மொழி வளர்ச்சிக்கு திராவிட இயக்கத்தினர் என்ன செய்து விட்டார்கள்? என்று தாங்கள் அங்கலாய்த்திருப்பதைப்பற்றியும் கூறுகிறேன் கேண்மின். உங்களையும் சேர்த்து இம்மாநில ஆட்சிபீடத்திலுள்ளவர்கள், வடநாட்டு மொழி ஆதிக்கக்காரர்களுக்குக் குனிந்து கொடுக்காமலிருக்கும் நிலை ஓரளவாவது இன்று உண்டென்றால், அதற்கு திராவிட இயக்கத்தினரின் தீவிரப் பணிதான் என்பதை இந்நாட்டு அரசியல் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் உங்களின்அர்த்தமற்ற பேச்சுக்குத் தக்க விளக்கம் தரும். ஏன் சுதேசமித்திரன் போன்ற தேசியப் பத்திரிகைகளின் முன்னைய — இன்றைய நடையைப் பார்த்தால்கூட தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பெரும்பணி புரிந்தவர்கள் தி. மு. கழகத்தினரா அல்லது இவ்வுண்மையை உணர்ந்துங்கூட வெட்டிப் பேச்சும் வரட்டுக் கூச்சலும் போட்டுத் திரியும் பேர்வழிகளா என்பதைத் தாங்கள் உணரக்கூடும்.

—கூத்தரசன்

சர்ச்சில்

இங்கிலாந்தின் இணையற்ற பிரதமர் சர்ச்சில் தன் முதுமை காரணமாக பிரதமர் பதவியில் இருந்து விலகுகிறார் அதைத் தொடர்ந்து ஈடன் பிரதமர் பதவியேற்றார்.

பம்பாய் தி. மு. க. செயற்குழு கூட்டம்

1—4—55 காலை 10 மணிக்கு தோழர் எஸ். வள்ளிநாயகம் தலைமையில் நடைபெற்றது, தோழர் இரா. மா. சண்முகராசன் திராவிடப்பண் பாடினார்.

10—4—55-ல் ப. தி. மு. க. துணைத் தேர்தல். ஒரு பொருளாளர் ஒரு செயற்குழு உறுப்பினர் ஆகியோருக்காக நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின் துணைச் செயலாளர் சா. தர்மராசன் நன்றிநவில கூட்டம் இனிது கலைந்தது.

ஆமதாபாத்.

27-3-55ல் ஆமதாபாத் மணி நகர் வட்டம் திராவிட முன்னேற்றக் கழகம் மாலை 5 மணிக்கு பத்திரவாலாசால் இடவில் ஐந்தாண்டு திட்ட கண்டன நாள் பொதுக்கூட்டம் ந, சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது இரா. வைத்திலிங்கம், இரா. தணிகாசலம் இரா, நடராசன், ந. நெடுமாறன், சொற்பொழிவாற்றினர்கள், கம்யூனிஸ்டுகளும் மற்றும் சிலரும் கூட்டம் நடத்த முடியாதபடி பல சதிச் செயல்களும் சூழ்ச்சியும் செய்தனர், கடைசியாக கம்யூனிஸ்டுகள் தோல்வி கண்டனர். கூட்டம் அமைதியாக நடைபெற்றது, ஐந்தாண்டுத் திட்டக் கண்டனநாள் தீர்மானம் டெல்லி அரசியலாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

*

1-4-55-ல் சமால்பூர் கழக இல்லத்தில் எஸ். நடராசன் தலைமையில் செயற்குழு மாலை 4-மணிக்கு மேல் ஆரம்பிக்கப்பட்டது. கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டன. செயற்குழு உறுப்பினர்களின் வசம் சந்தா வசூல் முறையை ஒப்படைக்கப்பட்டது. அடுத்து இம்மாதமே செயற்குழு மறுபடி கூட தீர்மானித்திருக்கிறது. தோழர் இரா. அப்பாராவ் அவர்களின் பிரச்னையைக் குறித்து அடுத்து செயற்குழுவில் பரிசீலிக்க ஒப்புதல் தெரிவித்துக் கொண்டு மாலை 6-30 மணிக்கு முடிவுற்றது.

நாடக ஆரம்பவிழா

பாண்டியனார் கலைக் குழுவினரின் 'சமாதி' நாடக ஆரம்பவிழா 1—4—55 மாலை 7 மணிக்கு சற்குணம் தலைமையில் "அன்பகத்"தில் நடைபெற்றது. தோழர்கள் வடவைக்குயில், கே. எம். தர்மலிங்கம், சா, தர்மராசன், மா, இரா, குறள்தாசன் ஆகியோர் நடிகர்களின் பொறுப்பு குறித்து பேசினர். பின்னர் முக்கிய நடிகர்களுக்கான பாகங்கள் வழங்கப்பட்டன, இறுதியில் தோழர் புத்தரசு நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது,

வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

2—4—55 அன்று கழக நிலயத்தில் தி, வே சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இவ்வாண்டு தலைவராக தி, வே, சுந்தரமூர்த்தி அவர்களையும் துணைத்தலைவராக தி. ஆ. பாலசுப்பிரமணி அவர்களையும் பொதுச்செயலாளராக கோ, சுந்தரேசன் அவர்களையும் துணைச் செயலாளராக வை, ஜெயசீதம் அவர்களையும் பொருளாளராக வே, த. மனோகரன் அவர்களையும் மற்றும் ஆறு நிர்வாக உறுப்பினர்களையும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

இராமநாதபுர மாவட்ட தி. மு. க. நிர்வாகக்குழு கூட்டம்

8—4—55 மாலை 3-மணிக்கு அருப்புக்கோட்டையில் செயலாளர் சிவ சண்முகசுந்தரன் தலைமையில் நடந்த பொதுக்குழு கூட்டத்திற்கு 13 உறுப்பினர் வந்திருந்தனர். நால்வர் முடிவை ஒப்புக்கொள்வதாக கடிதம் தந்தி மூலம் தெரிவித்தனர் 13-10-49 முதல் 1-4-55ம் நாள் வரை வரவு செலவுக் கணக்கு பரிசீலனை செய்து ஒப்புக் கொள்ளப்பட்டது, செயலாளரிடம் இருப்பு 8:4—14—4 மாவட்ட 2-வது மாநாட்டு மீதிப்பணம் தலைமைக் கழகத்திற்குச் சேர வேண்டியதில் வரி செலுத்திய ஈவுத்தொகை போக பாக்கிப் பணத்தை மாவட்ட கழகத்தில் செலுத்த வேண்டுமாய் மாநாட்டு பொருளாளர் வ பெ வடிவேல் அவர்களை கேட்டுக் கொண்டும் மாநாட்டு சொற்பொழிவுகளை இரு புத்தகங்களாக வெளியிட அதிகாரமளித்து அதற்கு கிடைத்த பண வரவு செலவு விபரங்களை மாவட்ட கழகத்திற்கு கொடுக்குமாறு மாநாட்டுச் செயலாளர் ஆசைத்தம்பி அவர்களைக் கேட்டுக் கொண்டும் இதுவரை உறுப்பினர் கட்டணம் வசூலித்து அனுப்பியிருப்பதில் மாவட்ட கழகத்திற்கும் கிளைக் கழகங்களுக்கும் சேர வேண்டிய பங்குத் தொகையை உடனே அனுப்பிக் கொடுக்க வேணுமாய் தலைமைக் கழகத்தைக் கோரியும், தீர்மானிக்கப்பட்டது பின் செயலாளர் இதுவரை ஒத்துழைத்த உறுப்பினர்களுக்கும் மற்றும் கழகத் தோழர்களுக்கும் நன்றி கூறினார். தோழர் என். கே. குருசாமி செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கு நன்றி கூற கூட்டம் முடிவுற்றது. இறுதியில் பொதுக்குழு உறுப்பினர்களின் போட்டோ எடுக்கப்பட்டது.

திருமழிசை

தி. மு. கழகத்தின் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் கூட்டம் 30—3—55 புதன்கிழமை மாலைதோழர் டி.கே. பொரூரான் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். வி. நடராசன் வி. எஸ். கோவிந்தராசன், டி. சண்முகம் எம்.எல்.ஏ. ஆகியோர் ஐந்தாண்டு திட்டத்தை விளக்கியும் அது நிறைவேற்றப்படும் நேர்மையில்லாமுறையையும் அதனால் தென்னாடு பாதிக்கப்படுவதையும் அதைக் கண்டிக்க வேண்டியதின் அவசியத்தையும் உண்மையையும் விளக்கிப் பேசினார்கள். கண்டனத் தீர்மானம் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிறப்பு

திருச்சி மாவட்ட அரியலூர் சிங்காரத் தெருவில் வசித்த ரே. மா. ராதாகிருஷ்ணன்— பார்வதி ஆகியோருக்கு, தற்போது வசிக்குமிடமான மலேயா கோல்ட் பீல்ட்ஸ் எஸ்டேட்டில் ஆண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலம்.

அதன் நினைவாக 'திராவிடன்' வளர்ச்சிக்கு ரூ. 1—6—0 (2 ஷில்லிங்) வரப்பெற்றோம்—நன்றி.

சென்னை 17-வது வட்டம் தேர்தல் விவரம்

செ: மு. கன்னியப்பன்
110 அவதானம்பாப்பய்யர் ரோடு சூளை
து. செ: இரா. தென்னவன்
பொ: உ. இளஞ்செழியன்
மா. பி: சு. பாலன், தூயமணி

நகரக் கிளைகளின் தேர்தல் முடிவுகள்

கிளைக் கழகங்களின் நிர்வாகிகளுக்கு

●

27-3-55-ல் நடைபெற்ற கிளைக் கழகங்களின் தேர்தல் முடிவுகள் முழுவதும் இன்னும் வந்து சேரவில்லையாதலால், சில நகரக் கிளைகளின் தேர்தல் முடிவுகளை மட்டும் இவ்வாரம் வெளியிட்டிருக்கிறோம். அடுத்தவாரம் மாவட்ட வாரியாக முழுவிவரம் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி. திராவிடன்

தூத்துக்குடி நகரக் கிளை

27-3-55 ஞாயிறு மாலை 5 மணிக்கு தூத்துக்குடி நகர திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் சென்னை தோழர் கே. எம். கண்ணபிரான் ஆணையாளராக இருந்து தேர்தல் நடைபெற்றது. செயலாளர் எம். எஸ். சிவசுவாமி துணை. செ: ஏ. மாடசாமி. பொரு: ஏ. அய்யாசாமி, மா. பி: பி. மூத்துசாமி, கே. வி. கே. சாமி, ஆ. பொன்னுசாமி, எம். எஸ். சிவசுவாமி, வி. சேகரன் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோவை நகரக் கிளை

27-3-55-ந் தேதி கோவை தி. மு. கழகக் கட்டிடத்தில் கோவை நகரக் கிளையின் தேர்தல் நடைபெற்றது. 391 உறுப்பினர்கள் வந்திருந்தனர். தேர்தல் போட்டி மும்முரமாக யிருந்தது.

செயலாளர் பதவிக்கு தோழர்கள் எஸ். ஏ. ராசமாணிக்கம். கோவை அரசுவும் போட்டியிட்டனர். தோழர் எஸ். ஏ. ராசமாணிக்கம் 317 ஓட்டுகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துணைச் செயலாளர் பதவிக்கு தோழர்கள் வெ. கிருஷ்ணமூர்த்தி கோவை. சேரலாதன், சிந்தனையாளன், சி. ரத்தினசாமி, சி. ராஜகோபால், எ. ராமசாமி ஆக ஆறுபேர் போட்டியிட்டதில் வெ. கிருஷ்ணமூர்த்தி 116 ஓட்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொருளாளர் பதவிக்கு தோழர்கள் பி. எஸ். புகழேந்தி பேச்சிமுத்து ஆகியோர் போட்டியிட்டனர் அதில் பி. எஸ். புகழேந்தி 229 ஓட்டுகள் பெற்று வெற்றியடைந்தார்.

செயற்குழு உறுப்பினர்களாக 18 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

மாவட்டப் பிரதிநிதிகளாக 16 பேர் போட்டியிட்டனர். இதற்கு வாக்குப்பதிவு நடைபெற்று கீழ்க்கண்ட 11 பேர்களும் அதிகப்படியான ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எஸ். ஏ. ராசமாணிக்கம், பி. பாலசுந்தரம், சிந்தனையாளன், அ. பழனிச்சாமி, கே. சிவசாமி, வெ. பேச்சிமுத்து, எஸ். டி. சிதம்பரம், கோவை செழியன், ஜி. வி. துரைசாமி, க. வணங்காமுடி, வெ. கிருஷ்ணமூர்த்தி.

பாராட்டு கூட்டம்

3-4-55 மாலை 5 மணிக்கு கோவை நகர தி. மு. க.வின் செயற்குழு, தோழர் என். வி. நடராசன் அவர்களின் முன்னிலையில் கூடியது. முன்னாள் செயற்குழுவினர்களின் ஒத்துழைப்பை பாராட்டி முன்னாள் செயலாளர் அ. பழனிசாமி அவர்கள் பேசிய பின் செயலாளர் ராசமாணிக்கம் பழைய செயற்குழுவின் சேவையைப்பாராட்டியும் புதிய செயற்குழுவினர் சிறந்த முறையில் ஒத்துழைப்பை தந்து கழக காரியங்களை செம்மையாகச் செய்ய உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இறுதியாக தோழர் என். வி. நடராசன் அவர்கள் கழக செயற் குழுவினர்களுக்கு அறிவுரைகள் கூறினார். புதிய செயற்குழுவினரால்பழையசெயற்குழுவினருக்கு தேநீர் விருந்து கொடுக்கப்பட்டு புகைப் படம் எடுக்கப்பட்டது.

தஞ்சை நகரக் கிளை

27-3-55 அன்று மாலை 5 மணி அளவில் தஞ்சை நகர தி. மு. கழக தேர்தல் கூட்டம் வெண்சங்கு கம்பெனியில், எஸ். பெத்தண்ணன் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

மீண்டும், கே. பட்டு செயலாளராகவும், ஜேம்ஸ் துணைச்செயலாளராகவும், வி. மயூரநாதன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கழக நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள்:

கரந்தை—கணேசன், கோ. மாரிமுத்து, சா. புருசோத்தமன். எம். ரத்தினம், கே. பரமசிவம் எம். சி. சுப்ரமண்யம், டி. சோமு எஸ். பெத்தண்ணன், டி. பி. ஜெகன்னாதன், எம். எம். நடராசன் கு.சுல்தான், அ. பன்னீர்செல்வம், டி. கே. சீனிவாசன், டி.எஸ். பஞ்சாபகேசன், ப. விஜயம், எ. வி. பதி, டி. ஜி. ரங்கநாதன்.

மாவட்ட கமிட்டி உறுப்பினர்கள்:

எ. வி. பதி, எஸ். பெத்தண்ணன், டி. கே. சீனிவாசன், வி. மயூரநாதன், எம். சி. சுப்ரமண்யம், டி.பி. ஜெகன்னாதன் டி.எஸ். பஞ்சாபகேசன்.

திண்டுக்கல் நகரக் கிளை

27-3-55 ஞாயிறு காலை 10-மணிக்கு, தி. மு. கழகப் பொது அங்கத்தினர்கள் கூட்டம் தோழர் க. வே. மச்சகேந்திரன் அவர்கள் தலைமையிலும், தேர்தல் அதிகாரி மா. நல்லுச்சாமி அவர்கள் முன்னிலையிலும் கூடி தோழர் ஏ. சுப்பையா செயலாளராகவும், தோழர் ந. தங்கவேலர் துணைச் செயலாளராகவும், தோழர் க. பெரியசாமி பொருளாளராகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் கீழ்க்கண்டவர்களை செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

பி. ராஜா, என். முத்து, ம. சு. ராஜன், பி. சமதர்மம், மா. தங்கவேலர், க. வே. விக்ரமாதித்தராசன், எஸ். ஏ. ராசன், எம். பழனிச்சாமி, எஸ். பாலு, எம். ஏ. கணேசன். எல். வீரராசன்.

மாவட்டப் பிரதிநிதிகளாகத் தோழர்கள்: பி. ராஜா, என். முத்து, க. வே. விக்ரமாதித்தராசன், பி. சமதர்மம். தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாயூரம் நகரக் கிளை

மாயூரம் நகர தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் 27-3-55 ஞாயிறு மாலை 4-மணிக்கு முசாபரி பங்களாவில் நடைபெற்றது. தோழர். க. அன்பழகன், தலைமை வகித்து தேர்தல் கூட்டத்தை நடத்தி வைத்தார்.

செயலாளர் பதவிக்கு தோழர்கள் தி. ப. நாதன், என். கிட்டப்பா, ஆகியோர் போட்டியிட்டனர் தேர்தல் நடத்தியதில் தோழர் என். கிட்டப்பா செயலாளராகவும். தோழர் சா. மீனாட்சிசுந்தரம் துணைச் செயலாளராகவும், தோழர் வி. சங்கையன் பொருளாளராவும், தோழர்கள் இரெ. ஜோசப், கே. எஸ். சௌந்தரராசன் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், தோழர்கள் இரெ. ஜோசப், வி. ஓ. பாண்டியன், பி. டி. ராசன், கே. எஸ். சண்முகம், இரா. வெள்ளியங்கிரி, அ. செங்குட்டுவன், கே. எஸ். சௌந்தரராசன், ஜே. சிகாமணி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களர்கவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

கர்னடகப் பகுதி

தி. மு. கழகப் பொதுச்செயலாளரின் அறிக்கைக் கேற்ப கர்னடகப் பகுதியில் (பெங்களூர்) 27—3—55-ம் நாள் நடைபெற்ற கிளைகளின் தேர்தலில் இதுவரை வந்துள்ள விவரங்கள்:-

பெரியார் நகர்

செயலாளர் எஸ். ஜே. உசேன், துணைச் செயலாளர் கே. கே, இளஞ்சேரன், பொருளாளர் சி. முனுசாமி மாவட்டப் பிரதிநிதிகள் ஆர். இராகவன், பி. கே. பெருமாள், செயற்குழு உறுப்பினர்கள் 8பேர்.

அக்கிப்பேட்டைகிளை

செயலாளர் வி, கே. நடேசன் துணைச் செயலாளர் ஜே. கனகசுந்தரம், பொருளாளர் சி. என். சாமி, மாவட்டப் பிரதிநிதிகள் எஸ். வி. பதி, ஜி. கிருட்டினன். செயற் குழு உறுப்பினர் 10பேர்.

இலக்குமணபுரி கிளை

செய: சி. எஸ். அண்ணியப்பன். து. செ: ஜே, ஏசுரத்தினம், பொரு: கே. ரேணு, மா. பி: மா. மன்னர், எம். கிருஷ்ணன் செயற்குழு உறுப்பினர்கள் 12 பேர்,

மாதுங்கா கிளை

27—3—55 மாலை 4 மணிக்கு பம்பாய் பி. பி. மாதுங்கா இலாவியா கட்டிடத்தில் மாதுங்கா தி. மு. க. வின் புதிய ஆண்டு நிர்வாகிகளின் தேர்தல் கூட்டம் தேர்தல் அதிகாரி ஓய். ஜோஸப் தலைமையில் நடைபெற்றது.

செயலாளராக தொ. து. அன்புச் செழியனும், உதவி செயலாளராக ஈ. அருணாசலமும், பொருளாளராக ஓய். ஜோஸப்பும்; மாவட்டப் பிரதிநிதிகளாக யோ. தர்மராசன், இ. எஸ். எஸ். பிச்சையா ஆகியோரும்; செயற்குழு உறுப்பினர் 8 பேர்.

நெல்லையப்பர் கலா நிலைய பள்ளிக்கூட உதவிநிதி நாடகம்

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் நடிக்கும்

இன்பக்கனவு

நாடகம்

எம். ஜி. சக்கரபாணி, என். எஸ். நாராயணபிள்ளை, முத்துக்கூத்தன், ஜி. சகுந்தலா, காந்திமதி மற்றும் பலர்

●

16—4—55 சனிக் கிழமை இரவு 10-மணிக்கு
கரூர் டாக்கிடாக் தியேட்டரில்

17—4—55 ஞாயிற்றுக் கிழமை இரவு 10-மணிக்கு
மணப்பாறை கலை நிறந்தவெளி அரங்கில்

19—4—55 செவ்வாய்க் கிழமை இரவு 10-மணிக்கு
பெரியகுளம் குமாரவேல் திறந்தவெளி அரங்கில்

கல்வியின் வளர்ச்சிக்கான இப்பணியிலே அனைவரும் ஒருமித்த மனதுடன் உதவி புரிந்து லட்சியம் நிறைவேற ஆணைபுரியக் கோருகிறோம

—மீ சு. இளமுருகு பொற்செல்வி

சென்னை மாவட்ட தி. மு. க. கிளைகளின் தேர்தல் முடிவுகள்

தி. மு. கழக பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் அறிக்கைப்படி, 27-3-55 அன்று நடைபெற்ற, சென்னை மாவட்ட தி.மு. கழக கிளைகளின் தேர்தல் முடிவுகள் வருமாறு:

●

1.வது வட்டம், தண்டையார்பேட்டை

செயலாளர்: ல. கண்ணன்,
3/4 கிருஷ்ணப்ப கிராமணி தோட்டம்,
துணைச் செயலாளர்: க. பட்டாபி
பொருளாளர்: து. கோவிந்தன்
மாவட்டப் பிரதிநிதிகள்: க. பட்டாபி, பொ. சம்பந்தம்.

2 வ. இராயபுரம்

செ: மு. த. இளஞ்சேரன்,
136, பி, வி: கோவில் தெரு
து. செ: : தா. மதிவாணன்
பொ: வி. குப்புசாமி
மா. பி. : கே. இ. சம்பந்தம், ஆர். எல். லிங்கராஜ

3 வ. சிங்காரத்தோட்டம்

செ: ஏ. ஜெயகீதம்
17 வேலாயுதபாண்டியன் தெரு
து. செ, டி. எம், பாண்டியன்
பொ: டி. எஸ், வேலன்
மா. பி. : எம். குப்புராஜு, வி. கே பி. சாமி,

4 வ. வண்ணாரப்பேட்டை

செ: த. சேதுராசன்
41, நரசையர் தெரு
து. செ: டி. வெங்கடேசன்
பொ: பி. கே. மாரியப்பன்
மா. பி: கே. எம். கண்ணபிரான், த. சேதுராசன்

5 வ, கொருக்குப்பேட்டை

செ: கி. நலங்கிள்ளி
2, துளசிங்க கிராமணித் தெரு
து. செ: ஆ. க. நேசன்
பொ: ஜி. எஸ், எழிலன்
மா. பி: எ, எஸ். வேணுபி.ஏ., கி. ராசேந்திரன்

6 வ. பெரம்பூர்

செ: பி. ஜே. வடுகநாதன்
46, துளசிங்க முதலியார் தெரு
து. செ: க. ஆராவமுதன்
பொ: ஆ. சுப்பிரமணியம்
மா. பி. க. சிதம்பரம், சிட்டிபாபு

7 வ. பேசின்பிரிட்ஜ்

செ: வே. வா. வேந்தன்
10, கண்ணைய நாயுடு தெரு
து. செ: மா. ரா. ஏழுமலை
பொ: வ. கணேசன்
மா. பி: தே. நா. புருடோத்தமன், வே. வா. வேந்தன்

8 வ. பெத்துநாயக்கன்பேட்டை

செ: சோ. சுந்தரம்
24, பெத்துநாயக்கன் பேட்டை
து. செ: இரா. மூர்த்தி
பொ: க. பாண்டியன்
மா. பி: என். வி. நடராசன், சி.ஆர். பாலசுந்தரம்

9 வ. ஏழுகிணறு

செ: வி, முனுசாமி
4 பரமானந்த முதலி தெரு
து. செ. : டி. ஜி. சாமி
பொ: செல்வபதி
மா. பி. : ஏ. எஸ். இராமன், சு. முத்தையா

10 வ. அம்மன்கோவில்

செ: வி. சி, தமிழ்தாசன்
18/2 பிரான்சிஸ்ட்யூரின் தெரு
து. செ: வெ, கி. பார்த்தசாரதி
பொ: துலுக்காணம்
மா பி: பா. சு. ப்ழநி, துலுக்காணம்

11 வ. முத்தியாலுபேட்டை

செ: எஸ். எஸ். துரைசாமி
6/16 சாலைவிநாயகர் கோவில் தெரு
து. செ: இரங்காநாதன்
பொ: க. வீ. இராதாகிருட்டிணன்
மா. பி: காஞ்சி மணிமொழியார். சீனுவாசன்

12 வ. ஆர்பர்

செ: எஸ். செல்வராஜ c/o பாஷா
21 இப்ராஹிம் சாயபு தெரு
து. செ; பி. வி. இராசன்
பொ: ஏ. கண்ணப்பர்
மா. பி: ஏ. கண்ணப்பர், மு. சண்முகம்

13 வ. கச்சாலீஸ்வரர் கோயில்

செ: சி. ர. பாண்டியன்
78, நைநியப்பன் வீதி மண்ணடி
து. செ: கே: நடராசன்
பொ: கே. கிருட்டிணமூர்த்தி
மா. பி: நாஞ்சில் சேவியர், வி. பொன்னுச்சாமி.

14 வ. கொத்தவால் சாவடி

செ: கோ. செங்குட்டுவன்
39, பத்திரையன் தெரு
து. செ: தி. ம பாலகிருட்டிணன்
பொ: ந. செயராமன்
மா. பி: கோ. செங்குட்டுவன், டி. கே. இராசாபாதர்

15 வ. சௌகார்பேட்டை

செ: ஏ. ஆனந்தன்
31, இராமகிருஷ்ணன் தெரு
து. செ: இராதாமணாளன்
பொ: கே. கோவிந்தசாமி
மா. பி: எ. ஆனந்தன், வி. இராமசாமி

18 வ. புளியந்தோப்பு

செ: சா. கோ நாராயணசாமி
ஓடிக்கண்டர் ரோடு
து. செ: கி. சுப்பிரமணி
பொ: வி. கங்காதரன்
மா. பி: தி. சு. நல்லதம்பி, கோ. கேசவன்

19 வ. பெரம்பூர்பாரக்ஸ்

செ: டி. நடராசன்
4 சேக்மொகிதீன் சுபேதர் தெரு
து. செ: ஆ. மாணிக்கம்
பொ: டி. தங்கவேலு
மா. பி: டி. எஸ். சண்முகம், கே. சகாதேவன்

20 வ. செம்பியம்

செ: பெ: பா. ஏகாம்பரம்
40 மார்க்கெட் தெரு செம்பியம்
து. செ: கு. அருண்மொழி
பொ: பி. சகதீசன்
மா. பி: பெ. பா: ஏகாம்பரம், க. பழனிவேல்

21 வ. அயன்புரம்

செ: பி. முனுசாமி
43 மேட்டுத் தெரு, அயன்புரம்
து. செ: பூ. வே. கேசவன்
பொ: சீ. தங்கச்சாமி
மா. பி: மு. காசி, வெ. மேகநாதன்

22 வ. கீழ்ப்பாக்கம்

செ: இரா. அரங்கநாதன்
13/4 சன்னியாசிபுரம்
து. செ: சுப்ரதீபன்
பொ; இரா. நெடுஞ்சேரலாதன்
மா. பி: சி. வெங்கடேசன், மோசானகிராமன்

23 வ. புரசைவாக்கம்

செ: ஜே எஸ். மணி
25/எ. நாராயணமேஸ்திரி தெரு ஓட்டேரி
து. செ: கே. பழனி
பொ: இ. எஸ். மணி
மா. பி: கி. இராமச்சந்திரன், ஆ. சுந்தரமூர்த்தி

24 வ. குயப்பேட்டை

செ: டி. கிருஷ்ணன்
9 பாஷ்யம் ரெட்டி முதல் தெரு ஓட்டேரி
து. செ: மே. க. மாணிக்கம்
பொ: எ. டி. டி. மணி
மா. பி. ஆர். டி. அரசு, கோ. காசிநாதன்

25 வ. வேப்பேரி

செ: த. வெற்றியழகன்
து. செ. அ. அண்ணாசாமி
பொ: அ. கு. அண்ணாமலை
மா. பி: கோ. துரைராசன், தி. க. பொன்னுவேலு

26 வ. பெரியமேடு

செ: மு. நேசமணி
2 ஸ்டிங்கர்ஸ் தெரு சென்னை-3
து செ: நல்லதம்பி
பொ: எ. கணேசன்
மா. பி: ஏ. கணேசன், இ. ஆ. வீரன்

28 வ. பார்க் டவுன்

செ; பழனி
5, காளப்ப ஆச்சாரி தெரு
து. செ; திருவேங்கடம்
பொ; கே. கோவிந்தசாமி
மா பி; கே. கோவிந்தசாமி, சி. டி. டி. அரசு

29 வ. நேப்பியர் பார்க்

செ: அ. பொ. அரசு
102 சாமி நாய்க்கன் தெரு
து. செ: வெங்கடேசன்
பொ: ப. க. வேணுகோபால்
மா பி: அ. பொ. அரசு, ப. க. வேணுகோபால்

30 வ. சிந்தாதிரிப்பேட்டை

செ: தி. மணிவண்ணன்
47 அருணாசல நாய்க்கன் தெரு
து செ: எம். கே. கண்ணன்
பொ: மதியப்பன்
மா பி: தி. மணிவண்ணன், ச. சுந்தரமூர்த்தி

31 வ. கோமளீஸ்வரன்பேட்டை

செ: வி இளஞ்சேரலாதன்
12 நாகப்ப முதலி தெரு சென்னை-2
து செ: அந்தோணி மாறன்
பொ: செங்குட்டுவன்
மா பி: வி. இளஞ்சேரலாதன், அந்தோணி மாறன்

32 வ. எழும்பூர்

செ: டி. ஏ. பி. துரை
10 நாராயணதாசிரி தெரு எழும்பூர்
து. செ: ஏ. கே. முத்தரசு
பொ: என். இரணியன்
மா. பி: ஆர். மாணிக்கம், என். சி. மணி

33 வ. சேத்துப்பட்டு

செ; சுகத்தோழன்
7/6 மங்களபுரம் 4 வது தெரு ஜெகநாதபுரம்
து. செ: இரா. ஆரோக்கியசாமி
பொ: சு. க. சின்னராஜு
மா. பி: க, கு. இளமாறன் முகணேசன்.

34 வ. நுங்கம்பாக்கம்

செ: தி. சு. கிள்ளிவளவன்
7 புதுக்குளத்தெரு
து. செ: மு. ஜெயராமன்
பொ: இரா. வையகத்தரசு
மா. பி: வ, சங்கரநாராயணன், இரா, சம்பந்தம்

35 வ. கோடம்பாக்கம்

செ: சோ. கிருஷ்ணமூர்த்தி
6 தேசிகர் தெரு
து செ: ச. இளங்கீரன்
பொ: த. ச. மதிவாணன்
மா பி: அ. சா. இளவழகனார், வில்லவன்

37 வ. இராயப்பேட்டை

செ: கோ. இளவரசு
127 வாயிட்ஸ் ரோடு சென்னை-5
து செ: ஏ. எல். கே. சாமி
பொ: மு. அரங்கநாதன்
மா பி: கோ. இளவரசு, பொ.எழுமலை

39 வ. மவுண்ட்ரோடு

செ: மா. மோகன்
12 யூனியன் சல்வி சாயபு தெரு சென்னை-2
து செ: கா. பாண்டியன்
பொ: டி. பாலவீரன்
மா பி: ம. செ. த. மூர்த்தி, கா. பாண்டியன்

40 வ. சேப்பாக்கம்

செ: அ. வி. செழுகதீசன்
39 லால்பேகம் தெரு
து. செ: கி. இராசாராம்
பொ: கோ. தாமோதரன்
மா. பி: அலுமேலு அப்பாதுரை துரைக்கண்ணு.

42 வ. திருவல்லிக்கேணி

செ: நீலநாராயணன்
21 தானப்ப செட்டித் தெரு
து. செ: மு. வரதராசன்
பொ: ஜி. பெருமாள்
மா. பி: இளம்பரிதி, பூ. அரங்கசாமி

43 வ. மீர்சாகிப்பேட்டை

செ: மு. புரட்சிமணி
52 நல்லண்ண முதலித் தெரு சென்னை-14
து. செ: து. வேணுகோபால்
பொ: பி. கே. சிவக்குமார்
மா. பி: வி. கன்னியப்பன், டி. ஏ. வெங்கிடாசலம்

44 வ. மயிலாப்பூர்

செ: ஏ. இராதாகிருஷ்ணன்
64 கார்ணீஸ்வரர் கோயில் தெரு
து. செ: எம், இராசு
பொ: என், கே, மூர்த்தி
மா, பி; எம், இராசு, ஆர். எம் மதியழகன்

48 வ. சைதாப்பேட்டை

எஸ் இராசவேலு
61-எ. பழைய மாம்பலம் ரோடு
து செ: த. தங்கதுரை
பொ: கோ, அண்ணாமலை
மா பி: பி. அண்ணாமலை, பெ, செங்குட்டுவன்

50 வ. அடையாறு

செ; சி, சிங்கனைச்செழியன்
18 விசுவலிங்கசெட்டி தெரு 2வது தெரு
து செ; தெ, பாண்டியன்
பொ: ம. து, கண்ணப்பன்
மா பி; சி, சிங்கனைச்செழியன், நீ. சமூகல.

ஆலந்தூர்

செ, மு, தங்கவேலு
2 ஜேம்ஸ் தெரு ஆலந்தூர்
து, செ, சோ, சு. பாலன்
பொ. துரைசிவப்பிரகாசம்
மா, பி, இரா. கோதண்டராமன் எம். ஆர். கோவிந்தன்

திருவொற்றியூர்

செ; எஸ் ஜ. வெங்கட்டராமன்
581 திருவொற்றியூர் ஐரோடு [தாங்கல்]
து செ; ப, பார்த்தசாரதி
பொ; டி, கே, பழனிச்சாமி
மா பி; எ, வி, ஆறுமுகம், டி. கே, சண்முகம்

கொடுங்கையூர்

செ; வெ. இராகவன்
3/93 பஜனை கோவில் தெரு கொடுங்கையூர்
து செ; கே. கே. நாதன்
பொ; சி. சேரன்
மா பி; எம். கிருஷ்ணமூர்த்தி, மு இராசன்

மாதவரம்

செ; நா. கோ, அரசு
பொன்னியம்மன் மேடு, மாதவரம்
து செ; மா. இரா, இளங்கோ
பொ; எம்,ஈ, பாண்டியன் [தங்கதுரை]
மா பி; ம. செங்குட்டுவன், எ, ஜெயராஜ

புழல்

செ. ச. எ, வீரவர்மன் c/o ஏ.எம், சாமி கல்யாண்தெரு புழல் ரெட்ஹில்ஸ்
து. செ: என் பாலசுந்தரம்
பொ. ஏ. எம். சாமி
மா பி; கே. பி. ஆடலரசன், டி. தினகரன்

செங்குன்றம்

செ. எ. கெங்காதரம்
டபிள்யூ. டி. ஆபீஸர்ஸ் தெரு
து செ எஸ். பி, ஜெயவேலு
பொ, எ. கோவிந்தராசன்
மா. பி, பி. சுந்தரமூர்த்தி, எம். தங்கப்பிரகாசம்,

●

‘விசித்திரப் பிறவிகள்!’

பூதலூர் புருடா!

தோழர் டி. ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் என்பவர் யார் என்பது எனக்கும் தெரியாது. உங்களுக்கும் யாரென்பது தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவர் ஓர் அய்யங்கார். தென் பிராந்திய ரயில்வே அதிகாரி “பி. டபிள்யூ. இன்ஸ்பெக்டர்” ஆறுமாதங்களுக்கு முன்புதான் திருநாகேஸ்வரத்திலிருந்து பூதலூருக்கு மாற்றினார்களாம்; திரும்பவும் அவரை வேதாரண்யம் (காட்டிற்கு)—அடைகுறி சமது—மாற்றிவிட்டார்களாம், அவ்வூர் ரயில்போக்குவரத்தோ மிக மிகக் குறைவாம். ஒன்று இரண்டு ஓடும் ரயில்களின் வேகமோ “மாதங்காத வழி” யாகி அவ்வளவு மெதுவாக நகர்ந்து சென்றாலும் அடைமிகு அலுப்போ மலைபத்தனையாம். இப்படியான ஓர் கிராமத்தில் அய்யங்காரை வேதாரண்யத்திற்கு மாற்றிவிட்டார்களாம் அவர் தனிப்பட்டவரல்லவாம். அவர் எல்லாருக்கும் சொந்தமாகவும், சமுதாயத்தோடு ஒன்றிப்போய் அனைவராலும் வேண்டப்படுபவராகத் திகழ்கிறாராம். எப்படி! அவர் ஒரு பாம்புகடி வைத்தியர். இன வகையருக்குத் தோன்றும் மனப்பித்துப் போராட்டம், இவனென்ன பல தரப்பட்ட வியாதிகளையும் கண்டிக்கும் வைத்தியராம். சாதிமத பேதமின்றி சகலருக்கும் பணி செய்கிறாராம். இலவசமாகவே செய்கிறாராம். எனவே அத்தகையவரை ஒரு மூலைக் காட்டிற்கு மாற்றினது கூடாதாம், ‘மெயின்லைன் ஸ்டேஷன்’ எதற்காகிலும் மாற்ற வேண்டும். இப்படி கடிதம் ஆங்கில (அய்யங்கார்) தின ஏட்டில் பூதலூர் அக்ரகாரத்திலிருந்து ஒரு ‘சப்புறி’ எழுதினர்.

எல்லாம் சரி, மேலே குறிப்பிட்டச் செய்தியில் வமக்கொன்றும் காழ்ப்பில்லை. ஆனால் ஒரு அரசாங்க அதிகாரி. அதுவும் மத்திய அரசாங்க அதிகாரி அரசாங்க உத்தியோகத்திலிருக்கிறவரையில் அவரது கவனம் அவர் செய்யும் தொழிலில் இருக்க வேண்டும் அதற்காக வேண்டி ஒரு நாளில் 24 மணிக்கும், மாதம் முப்பது நாளுக்கும் ஊதியம் தரப்படுகிறது. அவரது பாம்புகடி வைத்தியம், உத்தியோகத்திற்கு இடைஞ்சலாக இருக்கவே கூடாது, இது நாம் சொல்வதில்லை. அரசாங்க ஆணை, ஆகவே அவரது மாற்றுதலைக் குறித்து மற்றவர்கள் தலையிட இடமிருப்பதாகத் தோன்றவில்லை. இதை ஒரு பொது விஷயமாக்க இடமில்லை, வேண்டுமானால் அய்யங்காரே சில பல காரணங்களைச் சொல்லித் தமக்குப் பிடித்த ஊருக்கு மாற்றும் கேட்கலாம். அதுதான் முறை என்பதைக்காட்டவே இதை எழுதினோம்.

தவிர வேதாரண்யத்தில் தான் பாம்புகள் ஒருவேளை அதிகமிருந்தாலும் இருக்கலாம், அத்தகைய இடத்திற்குத்தான் ஒரு பாம்பு கடி வைத்தியர் “அத்யாவஸ்யம்” அங்கு தான் அவருடைய சேவையும் சோபிக்கும். “லைப்போட்” கப்பலில்தானே இருக்க வேண்டும் ரயில் பெட்டியில் என்ன வேலை அதற்கு? என்க.

அய்யங்கார் என்றால் என்னென்ன நடக்கின்றன என்று மற்றவர்கள் சொல்லிவிடுவார்களே என்ற கவலைதான் இதை எழுதத் தூண்டியது.

•

பகுத்தறிவுப்படை!

நமது கொள்கை அருமையானது. பகுத்தறிந்து பார்க்கும் பண்பு மக்கட்கு இயற்கையாக அமைந்த தொன்றாகும். அறிவிற்கு எட்டியவற்றை அலசிப் பார்த்து மேன்மையெனப்பட்டதை மேற்கொள்ளலும், அறிவிற்கு எட்டாதவற்றை ஒதுக்கி வைத்தலும், நமது அரும்பெரும் பணியாகும், இது நாகரீகம் முதிர்ந்த சாலம், அறிவைப் பயன் படுத் தும் காலம். நல்லொழுக்கம் நாடுவோர் அவ்வறிவின் துணை கொண்டே பெறலாம். மூடநம்பிக்கைகளும், கண்மூடி வழக்கங்களும், மதபோதனைகளும் நம்மை அண்டவேவிடக் கூடாது ஏன்! அவைகள் நம் அறிவைச் சூன்யமாக்கி, சிந்தனையை சிதறடித்துவிடும், ஒழுக்கங்கெட்டவனைச் சீர்திருத்த, பகுத்தறிவுப் பிரசாரத்தால் முடியும், அதற்குக்கடவுள் பயம் தேவையில்லை, கடவுள் பயம் வெறுங்கற்பனை. அக்கற்பனை ஆதிகாலத்தில் வேண்டற்பாலதாயிருக்கலாம்,

அக்கால மக்கள் அறிவற்ற மக்களாகத்திகழ்ந்திருந்தார்கள் அடக்க முடியாத, அடங்காப்பிடாரிகளாகவும், காட்டுமிராண்டிகளாகவும் வாழ்ந்தார்கள். அவர்களால் அழிவு தான் அதிகமானது ஆக்கம் இல்லை. அத்தகையோர்களை அடக்க; உடல் வலிமை குன்றி ஆனால் மூளைபலம் சற்று பெற்றவர்களுமான ஒரு சிலர். முனைந்தார்கள், “கடவுள்” குண்டை வீசினார்கள் மேலுலகம் கீழுலகம் அதாவது ‘மோட்சம்’ ‘நரகம்’ என்பவைகளைக் கற்பித்தார்கள், அடாது செய்பவன் நரகத்திற்குத் தள்ளப்பட்டு படாதுபடுவான். நல்லது செய்பவன் மோட்சத்திற்குத் தூக்கப்பட்டு சுகபோகங்கள் அனுபவிப்பான் அடாது செய்பவன் யார்! நல்லது செய்பவன் யார்! என்பதைக் “கடவுள்” கண் திறந்து பார்த்துக்கொண்டேயிருக்கிறார் என பயமுறுத்தினார்கள்,

‘கட்டுக்கடங்கா காட்டுமிராண்டிகள் கட்டுப்படலானார்கள், அதையொட்டி கற்பனைமேல் கற்பனையாக கட்டளைகள் பிறந்தன, தேவ கட்டளை என்றார்கள்! ஆ! வேதவாக்கு எனப் பணிந்தார்கள்! வணங்கினார்கள் அறிவற்ற மூர்க்கர்கள், வேதவாக்கை ஒலி ஒண்டிப் பிழைக்கத் தோன்றியதுதான் வேதியர்க் கூட்டமென்பது, வேதியர்க் கூட்டமென்றால் நம் நாட்டுப் பார்ப்பனர்களை மட்டும் நினைவில் கொண்டால் போதாது, உலகெங்கிய அத்தனை நாடுகளிலும் இக்கூட்டம் உருவானது, அறிவற்ற மக்கள் வாழ்ந்த காலத்தில், கடவுள், தேவ கட்டளை வேதவாக்கு. வேதியர் எல்லாம் சரி! தொலையட்டும்! ஆனால் அறிவு முதிர்ச்சி நிரம்பப் பெற்று ‘ஆட்டம்’ ‘ஹைட்ரஜன்’ குண்டுகள் வந்து ‘கடவுள் சக்தியா! அது ஆடிக் காற்றில் எச்சில் இலை மேலிட்டக் கல் என கையாண்டி செய்யும் இக்காலத்தில் எற்றுக்கு கடவுள் பயம்! தேவ கட்டளை! வேதவாக்கு வேதியர் படை எல்லாம்! அறிவுள்ள இக்காலத்தில் பகுத்தறிவுப் படைக்கு இடம் விட்டு விட்டு விலகட்டும் வேதியர் படை! விரைவில் விலகட்டும்!

—டபிள்யூ பி. டி. எழிலன்

எம். ஆர். ராதா சுற்றுப் பயணம்

8-4-55 போர்வாள்—தேவர்மன்றம், திருச்சி
9-4-55 தூக்குமேடை—டிராமா தியேட்டர், கடலூர்
10-4-55 தூக்குமேடை—முத்தமிழ்அரங்கு, கீழ்பெண்ணாத்தூர்
11-4-55 ராமாயணம்—டிராமா தியேட்டர், திருக்கோவிலூர்
13-4-55 ராமாயணம்—திருவாரூர்
14-4-55 ராமாயணம்— நீடாமங்கலம்
15-4-55 ராமாயணம்—குடவாசல்

தலைமைக் கழகம்: அறிக்கை—8/55

திராவிட முன்னேற்றக் கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
செங்கற்பட்டு	10—4—55	மாலை 2½ மணி	‘திராவிட நாடு’ அலுவலகம், காஞ்சிபுரம்	அ. பொன்னம்பலனார்
வட ஆற்காடு	10—4—55	மாலை 2 மணி	தி. மு. கழக அலுவலகம், ஆம்பூர்	என். வி. நடராசன்
தஞ்சை	10—4—55	காலை 10 மணி	முசாபுரி பங்களா, மாயவரம்	சத்தியவாணிமுத்து
மதுரை	10—4—55	மாலை 3 மணி	விக்டோரியா எட்வர்டு ஹால், மதுரை	இரா. நெடுஞ்செழியன்
இராமநாதபுரம்	10—4—55	மாலை 3 மணி	நாடார் பரிபாலன சங்கம், விருதுநகர்	தில்லை வில்லாளன்
நெல்லை	10—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், கண்ணம்மன் கோயில் தெரு, நெல்லைச் சந்திப்பு	ஏ. பி. தர்மலிங்கம்
சென்னை	17—4—55	காலை 9 மணி	‘அறிவகம்’ இராயபுரம், சென்னை—13	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
தென் ஆற்காடு	17—4—55	மாலை 3 மணி	அமராவதி பங்களா, (தபால் நிலையத்துக்கு அருகில்) நெல்லிக்குப்பம்	எம். எஸ். இராமசாமி
சேலம்	17—4—55	காலை 10 மணி	‘சாந்தி நிகேதன்’ கோயமுத்தூர் லாட்ஜ், சேலம்	காஞ்சி கல்யாணசுந்தரம்
கோவை	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், கடை வீதி, ஈரோடு	மதுரை எஸ். முத்து
திருச்சி	17—4—55	காலை 10 மணி	‘கருணாநிதி பார்க்’ என். என். பங்களா, திருச்சிராப்பள்ளி	என். எஸ். இளங்கோ
நாஞ்சில்	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், வடசேரி, நாகர்கோயில்	சி. பி. சிற்றரசு

சி. என். அண்ணாதுரை பொதுச் செயலாளர், தி. மு. க.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், சோமு அச்சகம் 16, வில்லியம்ஸ் ஸ்ரான் மில் தெரு, சென்னை 1.